



# தமிழரசு


1.7.1996 ரூ.3













# இந்த இதழில்..


மனுநீதித்திட்டம் 2

"கண்ணதாசா!" – முதல்வர் கவிதை 4

கண்ணதாசன் கவிச்சுளைகள் 5

புதிய மாவட்டங்கள் 6

உடனடி விவசாய மின் இணைப்பு 9

தமிழக அரண்மனைகள் 11

சோளக்கொல்லை பொம்மை 15

கொச்சைத் தமிழ் 16

உயர்ந்த மனிதர் 21

விழுப்பொருள் 24

அறிவியல் துளிகள் 27

செய்திச் சரம் 30

தலைவலி 32

புயல் 40

ஆசிரியர் மடல் 48



## தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

ஆனித் திங்கள்: 17

மலர் :27 இதழ் :1

1.7.1996

# மனுநீதித் திட்டம்!

அரசாணை (நிலை) எண். 1769, வருவாய், நாள் 28.8.1969-ன் படி பொது மக்களுக்கும் அரசு அலுவலர்களுக்குமிடையே ஒரு நேரடித் தொடர்பினை ஏற்படுத்தும் பொருட்டும், பொதுமக்கள் தங்களுடைய குறைகளை அரசு அலுவலர்களிடம் நேரடியாக எடுத்துக்கூறி, தலத்திலேயே அக்குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டும், ''மனு நீதித் திட்டம்'' என்ற திட்டம் 15.9.69 அன்று அறிமுகப்படுத்தப் பட்டது. இத்திட்டத்தின் முக்கியக் கூறுகளாவன:-

(i) இத்திட்டம் 1969 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தொடங்கும், ஒவ்வொரு மாதமும் 5 ஆம் தேதி நடக்கும்: ஒரு துணை வட்டாட்சியர் தலைமையில், வருவாய் ஊராட்சி ஒன்றியம், பொதுப் பணித் துறை மற்றும் மின்சாரத் துறைகளைச்சார்ந்த அலுவலர் குழு, ஒரு குறு வட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று பொதுமக்கள் குறைகளைக் கேட்கும்; ஒரு வருடத்தில், எல்லாக் கிராமங்களுக்கும் சென்று குறைகளைக் கேட்டுக் களைய வேண்டும் என்பது அரசின் எண்ணம் என்பதால், ஒரு குறு வட்டத்தில் 12 கிராமங்களுக்கு மேலே இருந்தால், அந்த மாதத்தில் 6 ஆம் தேதியன்று, குழு அடுத்த கிராமத்திற்கு வருகை தர வேண்டும்; பொது மக்கள் கொடுக்கும் மனுக்கள் மீது முடிவெடுக்க, புலத் தணிக்கை தேவைப்பட்டால், மேற்கண்ட குழு அத்தணிக்கையை மேற்கொள்ள வேண்டும். தலத்திலேயே முடிவெடுக்க முடியாத நிலையில், மனுக்களைப் பதிவேட்டில் பதிந்து கொண்டு மனுதாரருக்கு ஒரு மாதத்திற்குள் முடிவான ஆணை கொடுக்க-வேண்டும்.

(ii) கோட்ட அலுவலர், மாதம் ஒரு முறை, குறிப்பாக வியாழக் கிழமை அன்று ஒவ்வொரு வட்ட அலுவலகத்திற்கும் வருகைதந்து மனுக்களைப் பெற வேண்டும். அவர் வருவது பற்றி பொது மக்களுக்கு முன்னரே அறிவிக்க வேண்டும்.

(iii) மாவட்டாட்சியர், முன்னரே அறிவிக்கப்பட்ட திட்டத்தின் படி, ஒவ்வொரு கோட்ட அலுவலகத்திற்கும் வருகை தந்து பொதுமக்களிடம் மனுக்களைப் பெறவேண்டும். 6 மாதத்திற்கு ஒரு முறை, மாவட்டாட்சியர் வட்ட அலுவலகங்களுக்கு வருகை தர வேண்டும்.

2. மனுநீதித்திட்டச் செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றம் குறித்து, ஒவ்வொரு மாதமும் மாவட்டாட்சியர்களிடமிருந்து அறிக்கைகள் பெற்று ஆய்வு செய்யப்பட்டு வந்தது. இருப்பினும், மனு நீதித் திட்டத்திற்கு, அதை நடத்தும் அதிகாரிகள் போதிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மாதாந்திர முன்னேற்ற அறிக்கையை அனுப்பாமலும் அல்லது காலந்தாழ்த்தி அனுப்பியும், புள்ளி விவரங்களைச் சரியாகக் கொடுக்காமலும் பெரும்பாலான மாவட்டங்களில் வழக்கமாக இருந்து வந்துள்ளது.

3. எனவே, இத்திட்டம் மீண்டும் செம்மையாகச் செயல்படுவதற்கான ஆலோசனைகள் பின்வருமாறு கோட்டிட்டுக் காட்டப் படுகிறது:-

(i) மாவட்டத்தில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் திங்கள் கிழமைகளைக் ''கூட்டம் இல்லா'' நாளாக அறிவித்து, அன்று முழுவதும் அலுவலர்கள் பொதுமக்களிடம் இருந்து மனுக்களைப் பெறுவதற்கு வகை செய்ய வேண்டும்.

(ii) சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் நாட்கள் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் திங்கட்கிழமைகளைத் தவிர ஏனைய திங்கட்கிழமைகளில் அலுவலர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளக்கூடாது. அலுவலகத்தின் தலைமை அலுவலர்எதிர்பாராத வண்ணம்

சுற்றுப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தால் அவருக்கு இரண்டாம் நிலையாக உள்ள அலுவலர் பொதுமக்களிடமிருந்து மனுக் களைப் பெற்றுக் குறைகளைக் களைய வேண்டும். திங்கட் கிழமை தோறும் பெறப்பட்ட மனுக்கள் அதிக பட்சம் 100 நாட்களுக்குள் முடிவெடுக் கப்பட வேண்டும்.

(iii) 15 நாட்களுக்கு ஒரு முறை கோட்ட அலுவலர், துணை ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் ஒரு வட்டத்தில் மிகவும் உள்ளடங்கியுள்ள கிராமத்திற்குச் சென்று, மனுக்களைப் பெற்று அந்த இடத்திலேயே அதிகபட்சம் எத்தனை மனுக்களில் ஆணை பிறப்பிக்க முடியுமோ, அத்தனை மனுக்களில் ஆணை பிறப்பிக்க வேண்டும். மிகுதியுள்ள மனுக்களை இரண்டு வாரகாலக் கெடுவிற்குள் முடிவாக ஆணை பிறப்பிக்க வேண்டும். மூன்று ஆண்டுகால இடைவெளிக்குள் வருவாய்த்துறை சார்ந்த அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களால் ஒரு வருவாய்க் கிராமமும் சென்று பார்க்கப் படாமல் இருக்கக்கூடாது.

(iv) பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் முடிவெடுக்கப்படாமல் 100 நாட்களுக்கு மேல் இருக்கக்கூடாது. ஒரு வேளை சில மனுக்கள் 100 நாட்களுக்கு மேல் முடிவெடுக்கப்படாமல் இருக்கும் பட்சத்தில் அலுவலகத்தின் தலைமை அலுவலர் நாள்தோறும் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய வேண்டும்.

(v) பொது மக்களிடமிருந்து பெற்ற மனுக்களை விரைவில் முடித்து தங்கள் கடைமையைச் செய்ய வேண்டும்.

(vi) 200 நாட்களுக்கும் மேல் நிலுவையில் உள்ள மனுக்கள் ''நிக்னெட்'' மூலம் கணிப்பொறியில் ஏற்றப்பட வேண்டும். அவற்றின் முன்னேற்றம் குறித்த மாவட்ட ஆட்சியர் நாள் தோறும் தாமே ஆய்வு செய்ய வேண்டும்.

(vii) முதியோர் உதவித் தொகை பெறுவதற்குத்தகுதியுள்ள எந்த ஒரு மனுதாரரும் உதவி பெறாமல் இருக்கக்கூடாது. முதியோர் உதவித்தொகை வழங்குவதற்கு உச்சவரம்பு வைக்கக்கூடாது. அதிக பட்சம் 60 நாட்களுக்குள் அனைத்து முதியோர் உதவித்தொகை பெறக்கோரும் மனுக்கள் மீது முடிவெடுக்கப்பட வேண்டும்.

(viii) கருவுற்ற ஏழாவது மாதத்தில் பேறுகால உதவியை 30 நாட்களுக்குள் மாவட்ட நிர்வாகம் வழங்க வேண்டும்.

(ix) விபத்து ஏற்பட்ட 30 நாட்களுக்குள் விபத்து நிவாரணத் தொகையை வழங்க வேண்டும்.


(x) மாவட்டாட்சியரின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் கிராம, குறுவட்ட, வட்ட, கோட்ட, மாவட்ட அலுவலகங்களில் அனைத்து மக்கள் நலத் திட்டங்களைப் பற்றிய விபரங்களை அறிவிப்புப் பலகை மூலம் எல்லோருக்கும் தெரியும்படியாக முக்கிய இடத்தில் வைக்க வேண்டும்.

(xi) அலுவலர்கள் மீதான ஊழல் புகார்கள் மற்றும் ஊழலுக்கு வழிகோலும் தாமதம் பற்றிய புகார்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படும். நிரூபிக்கப்பட்ட ஊழல் குறித்த நேர்வுகளில் பதவி வெளியேற்றம் மற்றும் பதவி நீக்கம் போன்ற கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும்.

(xii) துறைத் தலைவர்கள் தங்களது சுற்றுப் பயணத்தின் போது ''திங்கட் கிழமை மனுப்பதிவேடு'' மற்றும் ''மனுநீதித்திட்ட மனுக்கள் பதிவேடு'' ஆகியவற்றைத் தணிக்கை செய்ய வேண்டும்.


(xiii) முடிவெடுக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை மற்றும் தரத்தின் அடிப்படையில் ஒரு சிறப்பு அறிக்கை தொடர்புடைய அலுவலர்களின் பணிப் பதிவேடுகளில் சேர்க்கப்படும்.

◆



# கண்ணதாசா என் இனிய நேசா

## கலைஞர்



என் இனிய நண்பா!
இளவேனிற் கவிதைகளால்
இதய சுகம் தந்தவனே! உன்
இதயத் துடிப்பை, ஏன் நிறுத்திக் கொண்டாய்?
தென்றலாக வீசியவன் நீ - என் நெஞ்சில்
தீயாகச் சுட்டவனும் நீ! அப்போதும்
அன்றிலாக நம் நட்பு திகழ்ந்ததே யன்றி
அணைந்த தீபமாக ஆனதேயில்லை நண்பா!

கண்ணதாசா! என்
எண்ணமெலாம் இனிக்கும் நேசா!
கவிதை மலர்த் தோட்டம் நீ! – உன்னைக்
காலமெனும் பூகம்பம் தகர்த்துத்
தரைமட்டம் ஆக்கிவிட்டதே!

கைநீட்டிக் கொஞ்சுவோர் பக்கமெலாம்
கரம் நீட்டித் தாவுகின்ற குழந்தை நீ!
கல்லறைப் பெண்ணின் மடியினிலும்
அப்படித்தான் தாவி விட்டாயோ;
அமைதிப்பால் அருந்தித் தூங்கிவிட்டாய்!

இயக்க இசைபாடிக் களித்த குயில் உன்னை
மயக்க மருந்திட்டுப் பிரித்தார் முன்னை!
தாக்குதல் கணை எத்தனை தான் நீ
தொடுத்தாலும்
தாங்கிக் கொண்ட என் நெஞ்சே உன் அன்னை!

திட்டுவதும் தமிழில் நீ திட்டியதால் – சுவைப்
பிட்டு என ஏற்றுக்கொண்ட என்னை;
தித்திக்கும் கவித் தமிழா! பிரிவின்
மத்தியிலே ஏன்விட்டுச் சென்று விட்டாய்?

அடடா! அந்த இளமைக் கழனியில்
அன்பெனும் நாற்று நட்டோம்!
ஆயிரங் காலத்துப் பயிர் நம் தோழமையென
ஆயிரங் கோடிக் கனவுகள் கண்டோம்!
அறுவடைக்கு யாரோ வந்தார்!
உன்னை மட்டும் அறுத்துச் சென்றார்!

நிலையில்லா மனம் உனக்கு! ஆனால்
நிலை பெற்ற புகழ் உனக்கு!
இந்த அதிசயத்தை விளைவிக்க – உன்பால்
இனிய தமிழன்னை துணை நின்றாள்!

என் நண்பா!
இனிய தோழா!
எத்தனையோ தாலாட்டுப் பாடிய உன்னை
இயற்கைத் தாய் தாலாட்டித்
தூங்க வைத்தாள்!

எத்தனையோ பாராட்டுப் பெற்ற உனக்கு
இயற்கைத் தாயின் சீராட்டுத்தான்
இனிக்கிறதா?
எனை மறந்தாய்! எமை மறந்தாய்!
உனை மறக்க முடியாமல்
உள்ளமெலாம் நிறைந்தாய்!

**(கவிஞர் கண்ணதாசன் 17.10.81 ல்**
**மறைந்தபோது எழுதியது.)**

# கண்ணதாசனின் கவிச்சுவைகள்

'போற்றுபவர் போற்றட்டும், புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும், தொடர்ந்து
செல்வேன்;
ஏற்றதொரு கருத்தைஎன துள்ளம் ஏற்றால்
எடுத்துரைப்பேன், எவர்வரினும் நில்லேன்,
அஞ்சேன்!'

'தன்னையே வியக்கும் தன்மை
தமிழுக்கும் எனக்கும் இல்லை!'

'ஒருமணி நேரம் ஊமையாய் இருங்கள்
சிலமணிப் பொழுது செவிடாய் இருங்கள்
மூன்றுநாழிகைகள் முடமாய் இருங்கள்
கூடுமானவரை குருடாய் இருங்கள்
இப்படியே தினம் இருந்துகொண் டிருந்தால்
மரணம் வரும்வரை மனிதராய் வாழலாம்!'

'சாதியைப் புலமாய்க் கொண்டு
தலைவர்கள் அமைந்தால் அங்கே
நீதியே அமைந்தி டாது!..'

'பொங்குமென் அருமை அண்ணாப்
புலவனின் சிரிப்பி னுள்ளே
சங்கமுத் தமிழும் நாட்டுச்
சனத்திரள் யாவும் தேங்கும்!'

'ஆற்றா அழுகை
அமைதியின் அன்னை;
அஞ்சும் நெஞ்சும்
அழுதால் தெளியும்!'

'பிள்ளை இரண்டுபெறு - அதற்குப்
பின்னர் மறுத்துவிடு!
கொள்ளைச் சுகமிருக்கும் - உடலின்
கோலத்தை வாழவிடு!'

'மாற்றம் என்பது
மானிடத் தத்துவம்!'

'நாமெல்லாம் ஒருகுடும்பம்; ஆகா, அந்த
நயம்மிகுந்த வார்த்தையில்தான் என்ன
இன்பம்!'



# புதிய மாவட்டங்கள் உருவாக்கம்

**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள 18.6.1996 அன்று திருவாரூரில் செய்தியாளர்களைச்சந்தித்தபோது நிர்வாக வசதிக்காக மேலும் சில மாவட்டங்கள் பிரிக்கப்படுமென்று தெரிவித்தார்; அவை குறித்த விவரங்கள் நிதிநிலை அறிக்கையில் வெளியிடப் படுமென்றும் அவர் கூறியிருந்தார்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் செப்டம்பரில் நடைபெற இருப்பதையொட்டி பிரிக்கப்படும் மாவட்டங்களை ஒன்றியங்களின் அடிப்படையில் பிரித்து முன்கூட்டியே அறிவிக்க வேண்டிய அவசியம் இருப்பதால் இன்று (22.6.1996) அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக விவாதித்துப் பின்வரும் ஒன்றியங்கள், நகரங்கள் அடங்கிய வகையில் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, அவற்றுக்கான பெயர்களும் அறிவிக்கப்படுகின்றன:

### செங்கை – அண்ணா மாவட்டம்

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக்கொண்டு (1) காஞ்சிபுரம் ஒன்றியம்; (2) உத்திரமேரூர் ஒன்றியம்; (3) அச்சரப்பாக்கம் ஒன்றியம்; (4) சித்தாமூர் ஒன்றியம்; (5) இலத்தூர் ஒன்றியம்; (6) மதுராந்தகம் ஒன்றியம்; (7) திருக்கழுக்குன்றம் ஒன்றியம்; (8) திருப்போரூர் ஒன்றியம்; (9) காட்டாங்கொளத்தூர் ஒன்றியம்; (10) வாலாஜாபாத் ஒன்றியம்; (11) திருப்பெரும்புதூர் ஒன்றியம்; (12) பரங்கிமலை ஒன்றியம்; (13) குன்றத்தூர் ஒன்றியம்; மற்றும் (1) ஆலந்தூர்; (2) காஞ்சிபுரம்; (3) செங்கற்பட்டு; (4) தாம்பரம்; (5) பல்லவபுரம்; (6) மதுராந்தகம்.

ஆகிய நகரங்கள் அடங்கிய பகுதி ''செங்கை-அண்ணா மாவட்டம்'' என்று அழைக்கப்படும்.

### செங்கை – எம்.ஜி.ஆர். மாவட்டம்

திருவள்ளூவரைத் தலைநகராகக் கொண்டு- (1) வில்லிவாக்கம் ஒன்றியம்; (2) புழல் ஒன்றியம்; (3) சோழவரம் ஒன்றியம்; (4) மீஞ்சூர் ஒன்றியம்; (5) கும்முடிப்பூண்டி ஒன்றியம் (6) எல்லாபுரம் ஒன்றியம்; (7) பூண்டி ஒன்றியம்; (8) திருவள்ளூர் ஒன்றியம்; (9) பூவிருந்தவல்லி ஒன்றியம்; (10) கடம்பத்தூர் ஒன்றியம்; (11) திருவாலங்காடு ஒன்றியம்; (12) திருத்தணி ஒன்றியம்; (13) பள்ளிப்பட்டு ஒன்றியம்; (14) ஆர்.கே. பேட்டை ஒன்றியம்; மற்றும் (1) அம்பத்தூர்; (2) திருத்தணி; (3) திருவள்ளூர்; (4) திருவொற்றியூர்; (5) ஆவடி.

ஆகிய நகரங்கள் அடங்கிய பகுதி **''செங்கை - எம்.ஜி.ஆர். மாவட்டம்''** என்று அழைக்கப்படும்.

### மன்னர் திருமலை மாவட்டம்

திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்டு (1) ஆத்தூர் ஒன்றியம்; (2) ஒட்டன்சத்திரம் ஒன்றியம்; (3) குஜிலியம்பாறை ஒன்றியம்; (4) கொடைக்கானல் ஒன்றியம்; (5) சானார்பட்டி ஒன்றியம்; (6) திண்டுக்கல் ஒன்றியம்; (7) தொப்பம்பட்டி ஒன்றியம்; (8) நத்தம் ஒன்றியம்; (9) நிலக்கோட்டை ஒன்றியம்; (10) பழனி ஒன்றியம்; (11) ரெட்டியார்சத்திரம் ஒன்றியம்; (12) வடமதுரை ஒன்றியம்; (13) வத்தலக்குண்டு ஒன்றியம்; (14) வேடசந்தூர் ஒன்றியம்; மற்றும் (1) பழனி; (2) திண்டுக்கல்; (3) கொடைக்கானல்

ஆகிய நகரங்கள் இணைந்த பகுதி **''மன்னர் திருமலை மாவட்டம்''** என்று அழைக்கப்படும்.


### வீரன் அழகுமுத்து மாவட்டம்

தேனியைத் தலைநகராகக் கொண்டு - (1) பெரியகுளம் ஒன்றியம்; (2) ஆண்டிப்பட்டி

ஒன்றியம்; (3) தேனி ஒன்றியம்; (4) போடி நாயக்கனூர் ஒன்றியம்; (5) சின்னமனூர் ஒன்றியம்; (6) உத்தமபாளையம் ஒன்றியம்; (7) கம்பம் ஒன்றியம்; (8) கடமலைக்குண்டு - மயிலாடும்பாறை ஒன்றியம்; மற்றும் (1) கம்பம்; (2) சின்னமனூர்; (3) பெரியகுளம்; (4) தேனி; (5) போடிநாயக்கனூர்

(10) எருமைப்பட்டி ஒன்றியம்; (11) பரமத்தி ஒன்றியம்; (12) மோகனூர் ஒன்றியம்; (13) கபிலர்மலை ஒன்றியம்; (14) ராசிபுரம் ஒன்றியம்; (15) வெண்ணந்தூர் ஒன்றியம்; (16) நாமகிரிப்பேட்டை ஒன்றியம்; மற்றும் (1) ராசிபுரம்; (2) குமாரபாளையம்; (3) திருச்செங்கோடு; (4) நாமக்கல் ஆகிய நகரங்கள்

ஆகிய நகரங்கள் இணைந்த பகுதி **"வீரன் அழகமுத்து மாவட்டம்"** என்று அழைக்கப்படும்.




### மதுரை மாவட்டம்

(1) திருப்பரங் குன்றம் ஒன்றியம்; (2) மதுரை கிழக்கு ஒன்றியம்; (3) மதுரைமேற்கு ஒன்றியம்; (4) மேலூர் ஒன்றியம்; (5) கொட்டாம்பட்டி ஒன்றியம்; (6) வாடிப் பட்டி ஒன்றியம்; (7) அலங்காநல்லூர் ஒன்றியம்; (8) சேடப்பட்டி ஒன்றியம்; (9) திருமங்கலம் ஒன்றியம்; (10) டி. கல்லுப்பட்டி ஒன்றியம்; (11) கள்ளிக்குடி ஒன்றியம்; (12) உசிலம் பட்டி ஒன்றியம்; (13) செல்லம்பட்டி ஒன்றியம்; மற்றும் (1) மதுரை மாநகரம்; (2) மேலூர்; (3) திருமங்கலம்.

ஆகிய நகரங்கள் இணைந்த பகுதிகள் **"மதுரை மாவட்டத்தில்"** அடங்கும்.

### ராஜாஜி மாவட்டம்

நாமக்கல்லைத்தலை நகராகக் கொண்டு, சேலம் மாவட்டத்திலிருந்து (1) சங்ககிரி ஒன்றியம்; (2) திருச்செங்கோடு ஒன்றியம்; (3) மல்லசமுத்திரம் ஒன்றியம்; (4) எலச்சிபாளையம் ஒன்றியம்; (5) பள்ளிப் பாளையம் ஒன்றியம்; (6) நாமக்கல் ஒன்றியம்; (7) சேந்தமங்கலம் ஒன்றியம்; (8) கொல்லிமலை ஒன்றியம்; (9) புதுச்சத்திரம் ஒன்றியம்;

இணைந்தது **"ராஜாஜி மாவட்டம்"** என்று அழைக்கப்படும்.

### சேலம் மாவட்டம்

(1) கொளத்தூர் ஒன்றியம்; (2) மேச்சேரி ஒன்றியம்; (3) நங்கவல்லி ஒன்றியம்; (4) தாரமங்கலம் ஒன்றியம்; (5) ஓமலூர்

ஒன்றியம்; (6) காடையாம்பட்டி ஒன்றியம்; (7) வீரபாண்டி ஒன்றியம்; (8) சேலம் ஒன்றியம்; (9) அயோத்தியாபட்டினம் ஒன்றியம்; (10) பனமரத்துப்பட்டி ஒன்றியம்; (11) வாழப் பாடி ஒன்றியம்; (12) பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம்; (13) ஆத்தூர் ஒன்றியம்; (14) கெங்கவல்லி ஒன்றியம்; (15) தலைவாசல் ஒன்றியம்; (16) எடப்பாடி ஒன்றியம்; (17) கொங்கனாபுரம் ஒன்றியம்; (18) மகுடஞ்சாவடி ஒன்றியம்; மற்றும் (1) ஆத்தூர்; (2) சூரமங்கலம்; (3) சேலம்; (4) மேட்டூர்; (5) எடப்பாடி.

ஆகிய நகரங்கள் இணைந்த பகுதிகள் **''சேலம் மாவட்டத்தில்''** அடங்கும்.

## தமிழ்நாட்டில் உள்ள 29 மாவட்டங்கள்

தமிழ்நாட்டில் இப்போது வீரன் அழகு முத்து, ஏ.டி. பன்னீர் செல்வம், ராஜாஜி ஆகிய 3 மாவட்டங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றையும் சேர்த்து 29 மாவட்டங்கள் தமிழகத்தில் இப்போது இருக்கின்றன. இந்த மாவட்டங்களின் பெயர்களும், அதன் தலைநகரங்களும் வருமாறு:

| மாவட்டம் பெயர் | | தலைநகர் |
|---|---|---|
| 1. சென்னை மாவட்டம் | .......... | சென்னை |
| 2. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் | .......... | திருவள்ளூர் |
| 3. செங்கல்பட்டு அண்ணா | .......... | காஞ்சிபுரம் |
| 4. வடாற்காடு அம்பேத்கர் | .......... | வேலூர் |
| 5. திருவண்ணாமலை சம்புவராயர் | .......... | திருவண்ணாமலை |
| 6. விழுப்புரம் ராமசாமி படையாட்சி | .......... | விழுப்புரம் |
| 7. தென்னாற்காடு வள்ளலார் | .......... | கடலூர் |
| 8. தீரன் சின்னமலை | .......... | கரூர் |
| 9. பெரும்பிடுகு முத்தரையர் | .......... | திருச்சி |
| 10. திருவள்ளுவர் | .......... | பெரம்பலூர் |
| 11. தஞ்சாவூர் | .......... | தஞ்சாவூர் |
| 12. ஏ.டி. பன்னீர்செல்வம் | .......... | திருவாரூர் |
| 13. நாகை காயிதே மில்லத் | .......... | நாகப்பட்டினம் |
| 14. புதுக்கோட்டை | .......... | புதுக்கோட்டை |
| 15. பசும்பொன் முத்துராமலிங்கம் | .......... | சிவகங்கை |
| 16. ராமநாதபுரம் | .......... | ராமநாதபுரம் |
| 17. காமராஜர் | .......... | விருதுநகர் |
| 18. கோவை | .......... | கோயம்புத்தூர் |
| 19. வ.உ.சிதம்பரனார் | .......... | தூத்துக்குடி |
| 20. திருநெல்வேலி கட்டபொம்மன் | .......... | திருநெல்வேலி |
| 21. மதுரை | .......... | மதுரை |
| 22. வீரன் அழகுமுத்து | .......... | தேனி |
| 23. சேலம் | .......... | சேலம் |
| 24. ராஜாஜி | .......... | நாமக்கல் |
| 25. மன்னர் திருமலை | .......... | திண்டுக்கல் |
| 26. பெரியார் | .......... | ஈரோடு |
| 27. தர்மபுரி | .......... | தர்மபுரி |
| 28. நீலகிரி | .......... | உதகமண்டலம் |
| 29. கன்னியாகுமரி | .......... | நாகர்கோவில் |

### ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம்

திருவாரூரைத் தலைநகரமாகக் கொண்டு (1) திருவாரூர் ஒன்றியம்; (2) திருத்துறைப்பூண்டி ஒன்றியம்; (3) முத்துப்பேட்டை ஒன்றியம்; (4) மதுக்கூர் ஒன்றியம்; (5) கோட்டூர் ஒன்றியம்; (6) மன்னார்குடி ஒன்றியம்; (7) நீடாமங்கலம் ஒன்றியம்; (8) வலங்கைமான் ஒன்றியம்; (9) கொரடாச்சேரி ஒன்றியம்; (10) குடவாசல் ஒன்றியம்; (11) நன்னிலம் ஒன்றியம்; மற்றும் (1) திருவாரூர் (2) மன்னார்குடி (3) கூத்தாநல்லூர்; (4) திருத்துறைப்பூண்டி.

ஆகிய நகரங்களும் இணைந்த பகுதி **''ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம்''** என்று அழைக்கப்படும்.

### தஞ்சை மாவட்டம்

(1) சேதுபாவாசத்திரம் ஒன்றியம்; (2) பேராவூரணி ஒன்றியம்; (3) பட்டுக்கோட்டை ஒன்றியம்; (4) திருவோணம் ஒன்றியம்; (5) ஒரத்தநாடு ஒன்றியம்; (6) அம்மாபேட்டை ஒன்றியம்; (7) தஞ்சாவூர் ஒன்றியம்; (8) பூதலூர் ஒன்றியம்; (9) திருவையாறு ஒன்றியம்; (10) பாபநாசம் ஒன்றியம்; (11) கும்பகோணம் ஒன்றியம்; (12) திருவிடைமருதூர் ஒன்றியம்; (13) திருப்பனந்தாள் ஒன்றியம்; மற்றும் (1) பட்டுக்கோட்டை; (2) தஞ்சாவூர்; (3) கும்பகோணம்


ஆகிய நகரங்கள் இணைந்த பகுதிகள் **''தஞ்சை மாவட்டத்தில்''** அடங்கும்.

### 9. நாகை-காயிதேமில்லத் மாவட்டம்

(1) வேதாரண்யம் ஒன்றியம்; (2) தலைஞாயிறு ஒன்றியம்; (3) கீழையூர் ஒன்றியம்; (4) கீழ்மேவளூர் ஒன்றியம்; (5) நாகப்பட்டினம் ஒன்றியம்; (6) திருமருகல் ஒன்றியம்; (7) குத்தாலம் ஒன்றியம்; (8) செம்பனார்கோயில் ஒன்றியம்; (9) மயிலாடுதுறை ஒன்றியம்; (10) சீர்காழி ஒன்றியம்; (11) கொள்ளிடம் ஒன்றியம்; மற்றும் (1) நாகப்பட்டினம்; (2) மயிலாடுதுறை; (3) சீர்காழி

ஆகிய நகரங்கள் இணைந்த பகுதிகள் **''நாகை காயிதே மில்லத்''** மாவட்டத்தில் அடங்கும்.

— இதை நடைமுறைப்படுத்துவதற்கும் பொதுமக்கள் கருத்துக்களை அறிவதற்கும் உயர் மட்டக்குழுக்கள் அமைக்கப்பட்டு இறுதி முடிவு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்படும்.



# விவசாயிகளுக்கு மின் இணைப்பு இன்னல் நீக்கி அரசு ஆணை!

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் மின்துறை அமைச்சர்
**திரு. ஆற்காடு என். வீரர்சாமி**

தமிழகத்தில் வேளாண் தொழில் செய்யும் விவசாயப் பெருங்குடி மக்கள், ஆற்றுப் பாசனம் மற்றும் ஏரிப்பாசனம் நடைபெறும் சிலஇடங்கள்தவிர, ஏனைய இடங்களில் கிணற்றுப் பாசனத்தை, நிலத்தடி நீரையே நம்பி உள்ளனர். கிணற்றுப் பாசனத்தை நம்பி இருக்கும் விவசாயிகள், தங்கள் மோட்டார்பம்புகள் மூலம் நீர் இறைக்கத் தேவையான சில மணி நேரம் தொடர்ந்து மின்சாரம் வழங்கப் பெறாமையால் பெரும் அவதிக்குள்ளாயினர். தமிழகத்தில் புதிய ஆட்சி மலர்ந்ததும் தங்கள் வாழ்க்கையில் இன்னல் தந்த இருள் நீங்கி ஒளி பிறக்கும் என்று விவசாயிகள் நம்பினர். தமிழகத்தின் மாண்புமிகு முதல்வராகக் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதும் அந்த நம்பிக்கைக்கு உயிர்கொடுத்து, மின்வாரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, விவசாயிகளுக்கு ஒரு நாளைக்குக் குறைந்தது பத்துமணி நேரம் மின்சாரம் வழங்க வேண்டும் என்று இந்த அரசு ஆணை பிறப்பித்தது.

மேலும் 31.12.91 க்குப் பிறகு, மின்கட்டண பாக்கியைச் செலுத்தி, இன்னும் மின்சாரம் கிடைக்கப்பெறாமல் இருக்கும் 2,224 விவசாயிகளின் மின் இணைப்புகளுக்கும் உடனடியாக மின்சாரம் வழங்கப்படவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் அடிப்படையில் மின்வாரியம் தக்க ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது. இதுவன்றி, மின்பாக்கியைச் செலுத்துவதற்குண்டான காலக்கெடுவை 30.9.96 வரை நீட்டிப்புச்செய்தும் அரசு ஆணைபிறப்பித்துள்ளது.

விவசாயிகளின் துன்பச்சுமையை வெகுவாகக் குறைத்திடும். அரசின் இந்தச் செயல் திட்டம் பற்றிய விவரம் வருமாறு:

தமிழகத்தில் 1979ஆம் ஆண்டிற்கு முன்பு விவசாய மின் இணைப்புக்களின் நிலுவைத் தொகையினை வசூல் செய்யும் பொருட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. இதனால்

பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். போராட்டம் தீவிரமடைந்தது. அந்தச் சமயத்தில் அரசாங்கம் விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, 31.12.1988க்குள் மின் இணைப்புத் துண்டிக்கப் பட்ட விவசாயிகள் உரிய அபராதத் தொகையுடன் மின் கட்டண பாக்கியைச் செலுத்தினால், அவர்களுக்கு மின் இணைப்பு மீண்டும் வழங்கப் படும் என்று அரசு ஆணை எண். 1621 (பொதுப் பணித்துறை) நாள் 7.10.88-இல் உத்தரவிட்டது.

மேற்குறிப்பிட்ட தேதிக்குள் விவசாயி களினால் மின் கட்டண பாக்கியை அபராதத் தொகையுடன் செலுத்த முடியாத காரணத் தினால், அரசாங்கம் மின் கண்டண பாக்கியைச் செலுத்த வேண்டிய தேதியை 30.9.96 ஆக நீட்டிப்புச் செய்து அரசின் கடித எண். 137324/2/89-1, நாள் 15.5.89 இல் உத்தரவு வழங்கியது. மேற்குறிப்பிட்ட சலுகையினை அரசாங்கம் மேலும் 31.3.90 வரை நீட்டிப்புச் செய்து அரசின் கடித எண். 140536/2/89-1, நாள் 8.11.89 இன் மூலம் உத்தரவிட்டது. மேலும் இந்தச் சலுகையானது 30.9.90 வரையிலும், மறுபடியும் 30.6.91 வரையிலும் அரசாங்கத்தால் நீட்டிக்கப்பட்டது.

இறுதியாகப் பிறப்பிக்கப்பட்ட அரசின் ஆணைக்குப்பிறகு உள்ள துண்டிக்கப்பட்ட மின் இணைப்புகளின் விவரம் பின்வருமாறு:

1) மின் கட்டண பாக்கித் தொகையினை செலுத்தாததனால் துண்டிக்கப்பட்ட விவசாய மின் இணைப்புகள் 19,005.

2) 31.12.91-ஆம் தேதிக்குள் மின் கட்டண பாக்கியை செலுத்தி மின் இணைப்புக் கொடுக்கப் பட்ட விவசாய மின் இணைப்புகள் 5,810.

3) 31.12.91-ஆம் தேதிக்குப்பிறகு மின் கட்டண பாக்கியைச் செலுத்தி, இன்னும் மின் இணைப்பு பெறாமல் இருக்கும் விவசாயிகள் 2,224.

புதிய அரசு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களது தலைமையிலே தமிழகத்தில் பொறுப்பேற்றவுடன் 31.12.91 க்குப் பிறகு மின் கட்டண பாக்கியைச் செலுத்தியுள்ள விவசாயிகளின் மின் இணைப்புக்களுக்கும் உடனடியாக மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்று முடிவு செய்ததன் அடிப்படையில் மின் வாரியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் மின் பாக்கியைச் செலுத்துவதற்குண்டான காலக் கெடுவை 30.9.96 வரை நீட்டிப்புச் செய்யத் தமிழக அரசு ஆணை இட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஆணையின்படி இதுவரை மின் கட்டணப் பாக்கியைச் செலுத்தாத அனைத்து விவசாயிகளும் இச்சலுகையினைப் பயன் படுத்திக்கொள்ளலாம்.

வேளாண்பெருமக்கள் தங்களது மின் கட்டணப் பாக்கியை குறிப்பிட்டுள்ள காலக் கெடுவிற்குள் செலுத்தி மின் இணைப்பை மீண்டும் பெற்றுப் பயன் பெற வேண்டும்.

## அட்டைப்படச் செய்தி

**முதல் அட்டை:** அண்மையில், சென்னை மாநகரில் பெய்த கடும் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பார்வையிட்டார்.

**இரண்டாம் அட்டை :** தோல் தொழிலில் ஈடுபட்டுள்ளோருடன் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்திப்பு (15.6.96)

**நான்காம் அட்டை :** 24.6.1927-இல் பிறந்த கவியரசர் கண்ணதாசன் பிறந்தநாள் நினைவாக.

சிறிதளவு உள்ளவன் ஏழையல்ல, ஆசை அதிகம் உள்ளவனே ஏழை.

– பிரஞ்சுப் பழமொழி

## எழில்மிகு தமிழகத்தின்

# அழகுசிந்தும் அரண்மனைகள்

அரண் என்றால் அழகு-காவல். மனை என்றால் வீடு. அழகும் காவலும் கொண்ட இல்லமே அரண்மனை. ஆண்டாண்டு காலமாய் நம்மை ஆளும் அரசர்கள் வாழுமிடம் அழகும் காவலும் இல்லாமல் இருக்குமா என்ன? ஆனால் நமது பழந்தமிழ் மாமன்னர்கள் வாழ்ந்து மகிழ்ந்த இல்லங்களைப் பற்றி கதைகளிலே காணக் கிடைக்கிறதே தவிர கண்கூடாக் கண்டறிய முடியவில்லை. காரணம், காலத்தால் அழியாத நிலைத்த புகழ் எதுவென அவர்கள் அறிந்திருந்ததுதான் என்று சொல்லலாம். தாங்கள் வாழ்ந்த இடங்களின் மீது அவர்கள் கொண்டிருந்த அக்கறையைவிட, மக்கள் பணியிலும் மகேசன் பணியிலும் தங்கள் சிந்தையை வெகுவாகச் செலுத்தியதுதான். இதற்கு எடுத்துக்காட்டாக, கரிகாலன் கட்டிய கல்லணையும், இராஜராஜன் கட்டிய பெருவுடையார் திருக்கோயிலும் இன்னும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் நின்று நிலைத்து அவர்கள் புகழ் பாடிக்கொண்டிருக்கும் என்பதில் ஐயமென்ன?

எனினும் பிற்கால மன்னர்கள் கட்டுவித்த பல அரண்மனைகள் கால ஓட்டத்தின் தாக்குதல்களை மீறி இன்னும் சிதிலமடையாமல் நமது முன்னோர்களின் கட்டிடக் கலைத் திறமைகளையும், நம் பண்டைய வரலாற்றையும் மக்களின் பண்பாட்டையும் சான்றாக நின்று விளக்கிக் கொண்டிருக்கின்றன.

### தரணி புகழும் தஞ்சை அரண்மனை

சூரிய வம்சத்தில் பிறந்த மனுமாந்தாதா, அந்த வம்சத்திலே புறாவுக்காக தன் உடலை அறுத்துக் கொடுத்த சிபிச்சக்கரவர்த்தி, அவருக்குப் பின் தோன்றிய இராஜகேசரி என்று தொடங்கி உலகமே வியந்து நோக்க தஞ்சாவூரைத் தலை நகராகக் கொண்டு சோழர் குலம் ஆண்டது ஒரு காலம். பின்னர் 15-16 ஆம் நூற்றாண்டுகளில் நாயக்க அரசர்களும், மராத்திய மன்னர்களும் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார்கள். தஞ்சாவூர் அரண்மனை அவர்கள் காலத்திலே கட்டப்பட்டது. கலை நயம்மிக்க 'தர்பார் மண்டபம்' மராத்தியர் ஆட்சியில் மராத்திய முறைப்படி மிகவும் சிறப்புடன் கட்டப்பட்டதாகும். கி.பி. 1600ல் கட்டப்பட்ட தர்பார் மன்றம் அழகிய பெரிய தூண்களும், எழில் கொஞ்சும் வளைவுகளும் சித்திர வேலைப்பாடுகளும் கொண்டு இலங்குகிறது. தற்போது தஞ்சை அரண்மனையில் உள்ள சரஸ்வதி மகால் கலைக்கூடமும், சரபோஜி மன்னரால் சேர்த்துவைக்கப்பட்ட அரிய நூல்கள் ஓலைச் சுவடிகள் அடங்கிய சரபோஜி மன்னர் நூல் நிலையமும் உள்ளன.

தஞ்சை மராட்டிய மன்னரான இரண்டாம் சரபோஜி, மனோரா உப்பரிகை ஒன்றை 1814 ஆம் ஆண்டு கட்டுவித்தார். 9 அடுக்குகளுடன் 43 மீட்டர் உயரம் உடைய இந்த உப்பரிகை பட்டுக்கோட்டை அருகில் உள்ளது.

### மனங்கவரும் மதுரை அரண்மனை


தமிழகத்தில் இன்று காணப்படும் அரண்மனைகளில் சிதிலமடையாமல் அப்படியே அழகாகக் காட்சியளிக்கும் அரண்மனை மதுரை அரண்மனையே ஆகும். இந்த அரண்மனையை, நாயக்க மன்னர்களில் மிகவும் புகழ் பெற்ற மதுரை நாயக்க அரசின் மன்னரான திருமலை அரசர் 1634 ஆம் ஆண்டு கட்டினார். மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையின் அழகே அதன் தூண்கள்தான். மொத்தம் 248 தூண்கள்

இருக்கின்றன. ஒவ்வொன்றும் 5 மீட்டர் சுற்றளவு கொண்டது. ஆறுபேர்கள் ஒன்று சேர்ந்தால்தான் ஒரு தூணைக் கட்டிப்பிடிக்க முடியும். இந்தியாவிலேயே இவ்வளவு அழகுடன் இவ்வளவு பெரிய தூண்கள் வேறு எங்கும் காணப்படவில்லை. தூண்களுக்கு இடையே உள்ள வளைவுகளும், குவிமாடங்களும் அழகு நிறைந்தவை. இந்த அரண்மனையைக் கட்டும் பணியில் ஒரு இடத்தில்கூட மரமோ இரும்போ பயன் படுத்தப்படவில்லை என்பதும் இதன் சிறப்பாகும்.

(மாநிலத் தொல்பொருள்துறை சேகரித்துள்ள அரிய பொருட்களையும், வரலாற்றுக் குறிப்புகளையும் வைத்து ஓர் அருங்காட்சியகம் இங்கே உருவாக்கப்பட்டுள்ளது. திருமலை மன்னரின் புகழ் விளக்கும் 'ஒலி-ஒளிக் காட்சி' நாள்தோறும் இந்த அரண்மனையில் நடத்தப்பட்டு வருகிறது.)

### சிந்தையை அள்ளும் சிராப்பள்ளி அரண்மனை

திருச்சிராப்பள்ளியை ஆண்ட இராணி மங்கம்மாள், மதுரை நாயக்க மன்னர்களின் பரம்பரையைச் சார்ந்தவர். இவர் தனது ஆட்சிக்காலத்தில் திருச்சிராப்பள்ளியில் தெப்பக்குளம் அருகே மிக எழிலுடன் ஓர் அரண்மனையைக் கட்டினார். நாயக்கர் காலக் கட்டிடச் சிறப்புக்குச் சான்றாக விளங்கிடும் இந்த அரண்மனையில் உயரம் குறைவான, ஆனால் அழகு மிகுதியான தூண்களும், வளைவுகளும் நம் இதயத்தைக் கவரும் தன்மையனவாகும்.



(தற்போது இந்த அரண்மனையில் 'டவுன் ஹால்' என்னும் திருச்சி நகர் மன்றக் கூடம் அமைந்துள்ளது)


### புதிய - பழைய புதுக்கோட்டை அரண்மனை

புதுக்கோட்டையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட புதுக்கோட்டை மன்னர்கள் தங்களது தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப கட்டிய பழைய, புதிய அரண்மனைகள் இன்றும் புதுக்கோட்டையில் உள்ளன. புதுக்கோட்டை புதிய அரண்மனை 1929 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும்.

(இந்தப் புதிய அரண்மனையில்தான் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இயங்கி வருகிறது)

### சென்னை சேப்பாக்கம் அரண்மனை

ஆங்கிலேய அரசு, நம்மை அடிமை கொண்டிருந்த காலத்தில் அவர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்த கர்நாடக நவாப் முகமது அலி, கி.பி. 1768ல் சென்னையில் ஓர் அழகிய அரண்மனையைக் கட்டினார். ஆனால், ஆங்கில அரசை இங்கே வழி நடத்திய டல்அவ்சி பிரபு, 1855 ஆம் ஆண்டு கர்நாடக நவாப்களின் பதவியைப் பறித்தார். ஆங்கிலேயர் அவரது பதவியைப் பறித்ததுடன்; அவர்கள் வாழ்ந்த அரண்மனையையும் கைப்பற்றி, அதனை அரசு அலுவலகமாக மாற்றி விட்டனர். (சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு தெற்கில் உள்ள இந்த சேப்பாக்கம் அரண்மனையில் தமிழ்நாடு அரசின்



சில அலுவலகங்கள் அமைந்து இன்றும் செயல்பட்டு வருகின்றன)

## சிதைந்த நிலையில் இருக்கும் சிவகங்கை அரண்மனை

சிவகங்கைச் சீமையை ஆண்ட மன்னர்கள் வழிவழியாய் வாழ்ந்து வந்த அரண்மனை இன்று சிதைந்த நிலையில் உள்ளது. கி.பி. 1730 ஆம் ஆண்டு, சிவகங்கை சசிவர்ணத்தேவர் இந்த அரண்மனையில் ஒரு பகுதியில் இராஜ இராஜேஸ்வரி கோயில் ஒன்றை எழுப்பினார். அக்கோயில் இன்றும் நல்ல நிலையில் உள்ளது. அதுமட்டுமின்றி, அரண்மனை நீச்சல் குளமும், கல்யாண மண்டபமும் ஓரளவு நல்ல முறையில் உள்ளன.

## எழிலுக்குக் கட்டியம் கூறும் எட்டயபுரம் அரண்மனை

கி.பி. 1852லிருந்து 1858 வரை ஆட்சி புரிந்த எட்டயபுர மன்னர் ‘ஜெகவீரராம குமார வெங்கடேஸ்வர எட்டப்பர் அய்யன்’ காலத்தில் எட்டயபுர அரண்மனை கட்டப்பட்டது. இந்த அரண்மனையின் எழிலுக்குக் கட்டியம் கூறுவனவாக முடிசூட்டுவிழா மண்டபமும், தர்பார் மண்டபமும் அமைந்துள்ளன.


## இராமலிங்க விலாசம் என்னும் இராமநாதபுரம் அரண்மனை

சேதுபதி மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இராமநாதபுரம் அரண்மனை கட்டப்பட்டது. இந்த அரண்மனைக்கு ‘இராமலிங்க விலாசம்’ என்று பெயர். இராமநாதபுர மன்னராக கி.பி. 1674 முதல் 1710 வரை ஆட்சிபுரிந்த கிழவன் சேதுபதி, இந்த அரண்மனைச் சுவர்களில் வண்ண ஓவியங்கள் நிறைந்ததாக இருக்கும்படி மிகக் கவனத்துடன் கட்டினார். இவ் வண்ண ஓவியங்கள் எழில் குறையாமல் இன்றும் பளபளப்பாகக் காட்சி அளிக்கின்றன.

## இடமே நமக்குச் சொந்தமான பத்மனாப புரம் அரண்மனை

குமரி மாவட்டத்தில் நாகர்கோயில் அருகே பத்மநாபபுரம் அரண்மனை அமைந்துள்ளது. ‘கல்குளம்’ என்பதே பத்மனாபபுரத்தின் பழைய பெயர் ஆகும். கி.பி. 1550ல் கல்குளம் வேணாட்டின் தலைநகராக விளங்கியது. கேரள மன்னன் மார்த்தாண்ட வர்மன் கி.பி. 1774ல் வேணாட்டின் பெயரைத் திருவிதாங்கூர் என்று மாற்றி அந்நாடு முழுவதையும் திருவனந்தபுரம் பத்மனாப சுவாமிக்குக் காணிக்கையாக்கினான். கல்குளம் அன்று முதல் பத்மனாபபுரம் என்று அழைக்கப்பட்டது. கேரள மன்னன் தர்மராஜன் தனது ஆட்சியில், தலைநகரை பத்மனாப புரத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு மாற்றினான்.

நமது நாடு விடுதலை பெற்ற பிறகு 1956 ஆம் ஆண்டில் மாநில சீரமைப்பின்படி கன்னியாகுமரி தமிழகத்துடன் இணைந்தது. இம்மாவட்டத்திலிருந்த பத்மனாபபுரம் அரண்மனையும் அதனோடு தமிழகத்திற்கு வந்துவிட்டது. கேரள கட்டிட முறைப்படி கட்டப்பட்டுள்ள இந்த அரண்மனையின் மூன்று அடுக்கு கொண்ட



உப்பரிகையும், நவராத்திரி மண்டபமும் கலைநயம் மிக்கவை. உப்பரிகை மாடியில் உள்ள ஓவியங்களும், அரண்மனைக் கடிகாரமும் புகழ் பெற்றவை. அறைகளும் கூடங்களும் முற்றிலும் மரத்தால் அமைக்கப்பட்டுள்ளன.

(பத்மனாபபுரம் அரண்மனை கேரளத் தொல்பொருள் துறையின் பாதுகாப்பில் உள்ளது. அரண்மனை அமைந்திருக்கும் இடம் மட்டும்தான் தமிழகப்பகுதி!)


## தமிழரசு வாசகர்களே! தமிழகப் பொதுமக்களே!

இன்னும் தீர்க்கப்படவில்லையே என்று நீங்கள் ஏங்கி நிற்கும் பிரச்சினை ஏதும் உங்கள் பகுதியில் உள்ளதா? உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை, நிறைவேறாமல் கிடக்கும் நீண்ட காலக் கோரிக்கை இப்படி எதுவாயினும் உடனே **"தமிழரசு"** இதழுக்கு எழுதுங்கள். அப்பிரச்சினை தொடர்பான துறையின் உயர் அலுவலர்களிடமிருந்து பதில் பெற்று **'தமிழரசு'** இதழில் வெளியிடப்படும்.

இப்பகுதிக்கு நீங்கள் எழுதிட நிபந்தனை ஏதுமில்லை. வேண்டுகோள் மட்டுமே உண்டு. உங்கள் கோரிக்கை பொதுநல நோக்கோடு அமையவேண்டும் என்பதே அது.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:

**"எங்கள் ஊர்ப் பிரச்சினை"**
தமிழரசு
அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை,
சென்னை - 600 002.



# சோளக் கொல்லை பொம்மை



ஒரு சோளக்கொல்லை பொம்மையிடம் கேட்டேன்.
தனிமையான இந்த வயல்வெளியில்
கால்கடுக்க நிற்கிறாயே –
கண்டிப்பாக நீ களைப்படைந்திருக்க வேண்டுமே?
அந்தப் பொம்மை –
அழகாகப் பதில் சொன்னது.
''அச்சம் ஏற்படுத்துவதிலுள்ள ஆனந்தம்
ஆழமானது; நீடித்து நிற்பது
ஆகையினால் நான் என்றுமே
களைப்படைவதில்லை.''
ஒரு கண நேரம் சிந்தித்த பின்
சொன்னேன் –
'நீ சொல்வது உண்மைதான்'
நானும் கூட அந்த இன்பத்தை அறிந்திருக்கிறேன்'
பதிலுக்கு அந்தப் பொம்மையோ –
''வைக்கோலால் நிரப்பப்பட்டு
உள்ளவர்களால்
மட்டும் தான் அதனை உணரமுடியும்'' என்றது!
என்னைப் பெருமைப்படுத்தியதா அல்லது
சிறுமைப்படுத்தியதா என்று தெரியாமலே
அவ்விடம் விட்டகன்றேன்.
உருண்டோடியது ஓராண்டு!
உருவெடுத்தது அப்பொம்மை
ஓர் ஞானியாய்-
மறுபடியும் - நான் அப்பொம்மையைக் கண்டபோது
அதன் தொப்பிக்கடியில்
காகங்கள் இரண்டு கூடுகட்டிக் கொண்டிருந்தன!

**– 'கலீல் கிப்ரான்' எழுதிய 'மேட்மேன்' என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து.**

# கொச்சைத் தமிழ்

சொல்லின் செல்வர்
ரா.பி. சேதுப்பிள்ளை

பச்சைக் குழந்தைகள் பேசும் பொழுதும் பாமர மக்கள் பேசும் பொழுதும் கொச்சை மொழிகளைக் கேட்கலாம். பாமர மக்கள் பேசும் தமிழில் பொருளற்ற அடுக்குச் சொற்கள் மிகுந்திருக்கும், ''பல்லு கில்லு தேச்சாச்சா? காப்பிகீப்பி சாப்பிட்டாச்சா? வீடுகீடு கிடைக்குமா? மழைகிழை உண்டா?'' என இவ்வாறு வரும் அடுக்குச் சொற்கள் பலப்பல. இவற்றில் முதல் சொல்லுக்குப் பொருள் உண்டு. அடுத்து, எதுகையாக வரும் சொல்லுக்குப் பொருளில்லை. இப்படி வெற்று எதுகையில் வரும் சொற்கள் ககர வர்க்கத்திலே தொடங்கக் காணலாம்.

இன்னொருவகையான அடுக்குப் பேச்சும் தமிழிலே உண்டு. 'வம்புதும்புக்குப் போகாதே; தக்குப்புக்கிண்ணு நடக்காதே, தண்டாமுண்டா பண்ணாதே; காச்சுப் பீச்சிண்ணு சுத்தாதே' – இவை போன்ற அடுக்குச் சொற்களிலும் முதற்சொல்லை அடுத்துவரும் சொல்லுக்குப் பொருள் இல்லை. ஆயினும், தொடர்ந்து வரும் சொல் ககர வர்க்கத்திலேதான் தொடங்க வேண்டும் என்று கட்டுப்பாடில்லை. இத்தன்மை வாய்ந்த அடுக்கு மொழிகள் மெல்ல மெல்ல இக்காலப் பாட்டிலும் உரையிலும் ஏறிவிட்டன. 'வாட்டசாட்டமாய்', திட்டவட்டமாய், கொஞ்சநஞ்சம், பாக்கிசாக்கி, சாலமாலம்' முதலிய சொல்லடுக்குகளை நவீன நூல்களிற்காணலாம்.

இவற்றைப் பார்க்கும் போது எதுகைப் பேச்சில் பாமர மக்களுக்கு உள்ள மோகம் நன்றாகத் தெரிகின்றது. எதுகையும் மோனையும் பாட்டுக்குத்தான் அழகு என்பதில்லை; பேச்சுக்கும் அவை நன்று என்று பொதுமக்கள் கருதுகின்றார்கள். அதனாலன்றோ எதுகை மோனை என்பதை 'எகனை மொகனை' என்று ஆக்கினார்கள்? மோனை என்ற சொல்லோடு இசையும்



வண்ணம் எதுகை என்னும் இலக்கியப் பதத்தை 'எகனை' என்று ஆக்கிவிட்டார்களே!

இவ்வாறு எதுகை நயத்திற்காக மாற்றப்பட்ட மற்றொரு சொல் 'நன்மைக்கு மாறானது' தீமை என்று இலக்கியத்தமிழ் கூறும். ஆயினும், நன்மை, தீமை நன்மை தின்மை என்று சொல்லும் பொழுது எதுகை நயம் இல்லையல்லவா? அதற்காகத் தீமை என்பதைத் தின்மை என்றாக்கி, நன்மை தின்மை என்று நாடோடித் தமிழில் வழங்கலாயினர். நாளடைவில் நன்மை தின்மை என்பது இலக்கியத் தமிழிலும் இடம் பெற்றுவிட்டது. கவியரசர் என்று போற்றப்படும் கம்பரே அதை எடுத்து ஆண்டுவிட்டார் என்பர்.

**''நன்மையும் செல்வமும்
நாளும் நல்குமே
தின்மையும் பாவமும்
சிதைந்து தேயுமே.''**

பாட்டில் நன்மையும் தீமையும் எதுகையில் அமைந்து அழகு செய்கின்றன.

கொச்சைத் தமிழில் பல்வேறு தொழில்களுக்கும் உரிய சொற்கள் கலந்திருக்கும் . சேலைத் துணிகளுக்குச் சாயம் ஏற்றுதல் தமிழ் நாட்டுப் பழமையான தொழில். சாயம் ஏற்றுபவருக்குச் சாயக்காரன் என்பது பெயர். சாயத்தில் கெட்டியானதும் உண்டு மட்டமானதும் உண்டு. கெட்டிச் சாயம் சலவைக்கு நிற்கும். மட்டச் சாயம் ஒரு சலவையில் கரைந்து போகும். இதிலிருந்து 'சாயம் வெளுத்துப் போச்சு' என்ற வசனம் எழுந்தது. ஒருவனுடைய போலித்தன்மை நீங்கி, உண்மை துலங்கும்போது அவன் சாயம் வெளுத்துப் போச்சு என்பார்கள்.

இதைப் போலவே கொச்சைத் தமிழில் வழங்கும் மற்றொரு வாசகம், 'காது குத்துதல்' என்பது. காது குத்துதல் சிலர் தொழில். காதிலேகடுக்கன், தோடு முதலிய நகைகளை அணிவதற்காக இளமையிலே காது குத்தும் வழக்கம் இந்நாட்டில் உண்டு. காது நகையில் எவ்வளவுதான் ஆசையிருப்பினும் காதைக் குத்தும்பொழுது நோகத்தானே செய்யும? கூர்மையுள்ள கருவியைக் கையிலே தாங்கி, 'காது குத்தப் போகிறேன்' என்று சொல்லிக்கொண்டு குத்துவோர் வருவாராயின், குழந்தைகள் காதைப் பொத்திக் கொண்டு கதறி அழத் தொடங்கிவிடும். இதற்காகக் காது குத்தவருவோர்கைக்குள்ளே



கருவியை மறைத்து வைத்துக் கொண்டு,காதைப் பார்ப்பவர்கள் போல நெருங்கி வந்து, வெடுக்கென்று குத்திவிடுவார்கள்!

இதிலிருந்து காது குத்துதல் என்ற பதத்திற்கே ஏமாற்றுதல் அல்லது வஞ்சித்தல் என்ற பொருள்வந்துவிட்டது. இப்படியே, காக்காய் பிடித்தல், குல்லாப் போடுதல், கம்பி நீட்டுதல் முதலிய சொற்களும் கொச்சைத் தமிழில் வழங்கக் காணலாம்.

## காலாடிப் பேட்டை


சென்னையில் கொச்சைத் தமிழ் வழக்கு அதிகமாக உண்டு. 'காலாடி, கில்லாடி, லம்பாடி' முதலிய சொற்களை அடிக்கடி கேட்கலாம். காலாடி என்பது சோம்பேறியைக் குறிக்கும். சோதா என்றும் அப்பேர்வழியைச் சொல்வதுண்டு. சென்னைக்கு அருகேயுள்ள திருவொற்றியூரில் காலாடிப்பேட்டை என்ற பகுதியொன்று உள்ளது. காலாடிகளுக்கும் அவ்வூருக்கும் பெயர்ப் பொருத்தத்தைத் தவிர, வேறு எவ்விதப் பொருத்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. நெசவுத்தொழில் செய்யும் மக்களே பெரும்பாலும் அப்பேட்டையில் வாழ்கின்றார்கள்.

'அப்படியானால் காலாடிப்பேட்டை என்ற பெயர் அதற்கு எப்படி வந்தது?' என்றால், அது ஒரு விந்தையான செய்தி. சென்னைத் துரைத்தனத்தில் 'காலெட்' என்ற ஆங்கிலேயன் மூன்று ஆண்டுகள் கவர்னராய் இருந்தான். தன்பேரை நிலைநாட்டுவதிலும் அவனுக்குப் பேராசை. திருவொற்றியூரில் புதிதாக ஒரு பேட்டையை உண்டாக்கி, 'காலெட் பேட்டை' என்று அதற்குப் பெயர் கொடுத்தான். 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது' என்பது போல, 'காலெட் பேட்டை' காலாடிப் பேட்டையாய்விட்டது.

ஏட்டுத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் எத்தனையோ வகைகளில் வேறுபாடு உண்டு. அவற்றுள் ஒன்றைப் பார்ப்போம்; பொருளுடையவனைச் செல்வன் என்பது ஏட்டுத் தமிழ்; பணக்காரன் என்பது பேச்சுத்தமிழ். இரவலன்என்பது ஏட்டுத் தமிழ்; பிச்சைக்காரன் என்பது பேச்சுத் தமிழ்.

இவ்வாறு பல சொற்களில் 'காரன்' என்பது ஆண்பாற் பெயர் விகுதியாகவும், 'காரி' என்பது பெண்பாற்பெயர் விகுதியாகவும் வழங்கக் காணலாம். வீட்டுக்காரன், வேலைக்காரன், தோட்டக்காரன், சமையற்காரன் - இவை ஆண்பாற் பெயர்கள். வீட்டுக்காரி, வேலைக்காரி, தோட்டக்காரி, சமையற்காரி - இவை பெண்பாற்பெயர்கள். ஆங்கில வாடை அதிகமாக வீசும் இடங்களில் வேலைக்கார், தோட்டக்கார், சமையற்கார் என்று ஈறு கெட்டு வழங்குதலும் உண்டு.

இதற்கும் மேலாகக் கொச்சைத் தமிழ் சென்னையில் கொழுந்துவிட்டு வளர்ந்திருக்கிறது. அண்ணன், தம்பி, அப்பன், மாமன் - இவர்களை முறையே 'அண்ணங்காரன், தம்பிக்காரன்; அப்பங்காரன், மாமங்காரன்' என்று கூறுவதைக் கொச்சைத் தமிழிலே கேட்கலாம்.



அப்படியே அக்காளை 'அக்காக்காரி' என்றும் அம்மையை 'அம்மைக்காரி' என்றும் மாமியை 'மாமிக்காரி' என்றும் வழங்குவர்.

> உதடுகளை மூடு; உன்
> இதயத்தைத் திற.
> – சுவாமி விவேகானந்தர்

## முறை பிறழ்தல்

நல்ல சில சொற்களில் வேண்டாத எழுத்துக்கள் புகுந்து விகாரப்படுத்தும் பொழுது, அவை கொச்சைத் தமிழாய்விடும். எண்பது என்பது ஒரு நல்ல சொல். அதை 'எண்பளது' என்று விகாரப்படுத்துவர் தஞ்சை நாட்டார். இப்படியே 'சேவை, கோவை, தேவை', என்னும் சொற்கள், முறையே 'சேர்வை, கோர்வை, தேர்வை' என்று கொச்சைத் தமிழில் வழங்குகின்றன.


தமிழின் சிறப்பெழுத்து என்று பாராட்டப்படுகின்ற ழகரம் கொச்சைத் தமிழில் மெத்தச் சிதையும். பாமர மக்கள் நாவில் ழகரம் திட்டவட்டமாக வருவதில்லை. திருவிழாவைத் 'திருவிஷா' என்பர் சோழநாட்டார். சென்னையில் பழம், பயமாகும். கழுதை, கயிதையாகும்; கிழவி கேவியாவாள்; கேழ்வரகு கேவராயி, கூவாகாகும்.

இன்னும் கொச்சைப் பேச்சிலே எழுத்துக்கள் முறை பிறழ்ந்து ஒலிக்கும். மதுரையை 'மருதை' என்றும், குதிரையைச் குருதை என்றும் கொச்சைத் தமிழில் கூறுவர். அபராதம் என்பதை 'அவதாரம்' என்பர். காஷாயம் என்ற வடசொல் காயாசம் ஆகும்.

'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்', என்பது போல ஒரு பொருளைக் குறிப்பதற்கு இரு சொற்கள் கொச்சைத் தமிழில் வழங்கும். கூறைப் புடைவை என்பது அப்படிப்பட்ட சொல். தமிழ் நாடெங்கும் கூறை என்ற சொல் முன்னாளில் வழங்கிற்று. புடவை என்பது அதன் பொருள். புடைவை நெய்யும் நாட்டிற்குக் கூறை நாடு என்ற பெயர் அமைந்தது. அதுதான். மாயூரத்திற்கு அருகேயுள்ள 'கொரநாடு'. நாளடைவில் கூறை என்பது அரும்பதமாய்விட்டது; அதன் பொருள் மழுங்கிவிட்டது. அதனால் கூறைப் புடைவை என்று இப்போது வழங்குகின்றது.

பழுதை என்பது ஒரு பழமையான சொல். கயிறு என்பது அதன் பொருள். இப்போது இரண்டையும் சேர்த்துப் 'பழுதைக்கயிறு' என்று கூறுகின்றார்கள்.

இவ்வாறு இருவேறு மொழிச் சொற்களை இணைத்துப் பேசும் முறையும் கொச்சைத் தமிழில் உண்டு; 'கேட்டுவாசல், ஷாப்புக் கடை' முதலிய வார்த்தைகளில் ஆங்கிலமும் தமிழும் இணைந்து வருகின்றன.



'நல்லவருக்கு அடையாளம் சொல்லாமல் பறையாமல் போவது' என்று தென்னாட்டிலே ஒரு பழமொழியுண்டு, 'சொல்லாமல் பறையாமல்' என்பதில் சொல்லாமல் என்பது தமிழ்; பறையாமல் என்பது மலையாளம்.


## பிள்ளைகள் நிலை

ஆண் குழந்தையை 'ஆம்பளப்பிள்ளை' என்றும் பெண் குழந்தையைப் 'பொம்பளப்பிள்ள்ளை' என்றும் கொச்சைத் தமிழ் கூறும். ஆண் பிள்ளை என்ற சொல்லில் பிள்ளை என்பது குழந்தைப் பருவத்தைக் குறிப்பதாகும். அப்படியே பெண் பிள்ளை என்ற சொல்லிலும் பிள்ளை என்பது குழந்தை நிலையைக் குறிக்கும். நாளடைவில் ஆண் பிள்ளையின் சிதைவாகிய ஆம்பளை என்பதும், பெண் பிள்ளையின் சிதைவாகிய பொம்பளை என்பதும் பருவத்தைக் குறியாது பொதுவாக ஆண் வர்க்கத்தையும் பெண் வர்க்கத்தையும் குறிப்பனவாயின. ஆகவே, குழந்தைகளைக் குறிப்பதற்கு மேலும் பிள்ளை என்ற சொல்லைச் சேர்க்க வேண்டியதாயிற்று. அப்படிச் சேர்த்ததனால் ஆம்பளைப் பிள்ளை, பொம்பளைப் பிள்ளை என்ற கொச்சைப் பதங்கள் வழங்கி வருகின்றன.

இவ்வாறு கொச்சைத் தமிழில் வழங்கும் சொற்களால் சில வேளைகளில்

> உழைப்பு மூன்று
> கேடுகளிலிருந்து நம்மைக்
> காக்கிறது; அவை - சலிப்பு,
> தீய ஒழுக்கம், வறுமை.
> – வால்ட்டேர்

விபரீதமும் விளைவதுண்டு. சென்னையில் ஹாமில்டன் வாராவதி, ஆமிட்டன் வாராவதியாகி, அம்பட்டன் வாராவதி எனச் சிதைந்து, ஆங்கிலத்தில் 'பார்பர்ஸ்



பிரிட்ஜ்' என்று மொழி பெயர்க்கப்பட்டிருப்பது நாடறிந்த செய்தியன்றோ?

கும்பகோணத்திற்கு அருகே உப்பிலியப்பன் கோயில் என்னும் திருமால் திருப்பதி ஒன்று உள்ளது. அங்குள்ள பெருமாள் உப்பிலியப்பன் என்று வழங்கப்படுதலால், உப்பில்லாத நிவேதனம் அப்பெருமாளுக்கு அளிக்கப்படுகின்றது. இவ்வாறு செய்ய நேர்ந்ததற்குக் காரணம் கொச்சைத்தமிழ்தான். 'ஒப்பிலியப்பன்' என்று பெருமாள் திருப்பெயரை 'உப்பிலியப்பன்' என்று சிதைத்தது கொச்சைத் தமிழ்; தனக்கு உவமையில்லாத தலைவனாகிய இறைவனை ஒப்பிலி என்னும் சொல் உணர்த்துவதாகும். 'நின்னொப்பார் பிறரின்றி நீயே ஆனாய்' என்று ஈசனைத் தேவாரம் பாடியது போன்று, திருவாய் மொழியிலே 'தன்னொப்பார் இல்லப்பன்' என்று பாடினார் நம்மாழ்வார்.

அவர் வாக்கின் அடியாக ஒப்பிலியப்பன் என்ற பெயர், பெருமாளுக்கு வழங்கலாயிற்று. அப்பெயர் உப்பிலியப்பன் எனச் சிதையவே, உப்பில்லாத பண்டத்தை ஏற்கும் நிலை இறைவனுக்கே ஏற்பட்டுவிட்டது.

கர்வம் பிடித்தவனை 'அகராதி பிடிச்சவன்' என்று கொச்சைத் தமிழிலே கூறுவதுண்டு. அகம்பாவத்திற்கும் அகராதிக்கும் என்ன தொடர்பு? இவ்விரண்டுக்கும் ஒரு தொடர்பிருப்பதாகப் பாமர மக்கள் கருதுகிறார்கள். அகராதியை ஒருவன் முற்றும் படித்துவிட்டால் எல்லாம் தெரிந்துவிட்டது என்ற மண்டைச் செருக்கு உண்டாகிவிடும் என்பது அவர்கள் கருத்து. 'கல்லாடம் படித்தவனோடு சொல்லாடாதே' என்னும் பழமொழி புலவருலகத்தில் வழங்குதல் போல, 'அகராதி படித்தவனை அணுகாதே,' என்ற எச்சரிக்கை பாமர உலகத்தில் எழுந்தது போலும்!


'விண்ணாணம்' என்பது கொச்சைத் தமிழிலே வழங்கும் மற்றொரு சொல். 'விஞ்ஞானம்' என்ற அருமையான சொல்லே 'விண்ணாணம்' என்று சிதைந்திருப்பதாகத் தோன்றுகிறது. வக்கணையாகவும் தோரணையாகவும் பேசும் பேச்சுக்கு விண்ணாணம் என்று பெயர்.

குற்றாலக் குறவஞ்சி நாடகத்தில் சிங்கி என்னும் பெயருடைய குறத்தியை 'விண்ணாணச் சிங்கி' என்று கூறுகின்றான், அவள் காதலனாகிய குறவன். விண்ணாணம் பேசும் சிங்கியைக் காணாமல் கவலையுறும் குறவன் பாட்டு, சாலவும் இனியதாகும்.

## இதுதான் 'ஓசி'

கொச்சைத் தமிழிலே பல ஆங்கிலச் சொற்கள் கலந்து வழக்கக் காணலாம். 'ஓசி' என்பது அத்தகைய சொற்களில் ஒன்று. 'நாசிக்குப் பொடி ஓசி', வெறும் வாய்க்கு வெற்றிலை பாக்கு ஓசி'.

ஓசி என்பது சும்மா கிடைப்பது; விலை கொடாமல் பெறுவது. இந்தச் சொல்லின் வரலாற்றைப் பார்த்தால் ஏறக்குறைய இருநூறாண்டுகளாக இந்நாட்டில் இது வழங்கி வருகின்றது என்பது விளங்கும். ஆங்கிலக் கம்பெனியார் இந்நாட்டில் ஆட்சி செலுத்தியபொழுது இக்கம்பெனியின் சார்பாக அனுப்பிய அஞ்சல் கடிதங்களில் 'ஓ.சி.எஸ்.' என்ற முத்திரை இட்டார்கள், ஓ.சி.எஸ். என்பது' ஆன் கம்பெனி செர்வீஸ்' (On Company Service) என்பதன் குறுக்கம். ஓ.சி.எஸ். தபால்கள் பில்லை ஒட்டாமல் எங்கும் சென்றமையால் ஓ.சி.யில்



போகிறது என்ற சொல்லுக்குச் சும்மா போகிறது என்னும் பொருள் வந்தது.

சீட்டுக் கச்சேரியில் 'ஆடுதன்' என்ற சொல்

அடிக்கடி வரும். ஆடுதன் என்பது Hearts என்ற ஆங்கிலச் சொல்லின் சிதைவு. வாட்டசாட்டமாயிருப்பவனைப் பார்த்து' ஆடுதன் ராஜா மாதிரி இருக்கிறான்' என்று சொல்வதுண்டு.

நாட்டுப்புறங்களில் 'ஏட்டையா' என்பவரைக் கண்டால் ஒரே ஓட்டந்தான். 'ஏட்டையா' என்பவர் எட் கான்ஸ்டெபிள். ஆங்கிலச் சொல்லாகிய Head என்பது 'ஏட்டு' என்று சிதைந்து வழங்குகின்றது. இவ்வாறு வழங்கும் கொச்சைத் தமிழ்ச் சொற்களை ஆராய்ந்தால் பாமர மக்களின் மனப்பான்மையும் தமிழின் நீர்மைக்குத் தக்கவாறு அவர்கள் பிறமொழிச் சொற்களை எடுத்தாளும் பெற்றியும் நன்கு விளங்கும்.

**(நன்றி: இலக்கியச்சிந்தனை, 5 சித்தரஞ்சன் சாலை, சென்னை - 18.)**

### பாரதி சொல்

***தமிழ்நாட்டில் உண்மையான கல்வி பரவ வேண்டுமானால், சகல சாத்திரங்களும் தமிழ் மொழி மூலமாகவே கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை நமக்குள்ளே கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதை நடைமுறைக்குக்கொண்டு வருவதற்குத் தக்கபடி நமக்குள்ளே சக்தி பிறக்கவில்லை. இப்படிப்பட்ட நிலை விரைவில் நீங்க வேண்டும்.***

*– மகாகவி பாரதியார்*

சென்னையில் உள்ள பெத்துநாயக்கன் பேட்டையில், *1938*-இல் மகளிர் கழகத்தால் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தப்பட்டது. அதில்தான் 'பெரியார்' என்ற பட்டத்தை அவருக்கு, வீராங்கனை டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார் அவர்கள் வழங்கினார்.

பெரியாருக்கு **'வைக்கம் வீரர்'** என்ற பட்டம் சூட்டியவர் தமிழ்த் தென்றல் திரு.வி. கல்யாண சுந்தரனார் ஆவார்.

இப்போதைய உலக மக்கள் தொகை கணக்கின்படி, ஒரு நிமிடத்திற்கு 170 குழந்தைகள் பிறக்கின்றனவாம். இந்த விஷயத்தில் இதே வேகம் தொடருமானால், கி.பி.2050-இல் உலக மக்கள் தொகை 12,506 மில்லியனாக இருக்கும். இப்போதோ, 5,600 மில்லியன்கள். ஒரு மில்லியன் என்பது 10 இலட்சம் ஆகும்!

தமிழ்நாட்டில் முதன் முதலாகக் கத்தோலிக்கத் தேவாலயம் கட்டப்பட்ட இடம் தரங்கம்பாடி. அந்தத் தேவாலயம் கட்டப்பட்டு ஏறத்தாழ நானூறாண்டுக் காலம் ஆகிறது.

தந்தை பெரியார், மூதறிஞர் இராஜாஜி, அறிஞர் அண்ணா மூவரும் கடைசியாக மேடையேறிச் சொற்பொழி வாற்றியது சென்னை மாநகரிலேதான்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சென்னையிலேதான் 8.10.1972-இல் காந்தியடிகள் சிலையைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார்.

தந்தை பெரியார் அவர்கள் 19.12.1973-இல், தியாகராய நகரில் நடைபெற்ற சமூக இழிவு ஒழிப்புப் பொதுக்கூட்டத்தில்தான் தமது கடைசி உரையை ஆற்றினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் 14.11.1969-இல் சென்னை தியாகராய நகரில்தான் கலைவாணர் என்.எஸ்.கே. சிலையைத் திறந்து வைத்து உரை ஆயாற்றினார்!

# உயர்ந்த மனிதர்

அது ஒரு பெரிய மருத்துவமனை. அந்த மருத்துவமனைக்கு வெளியே, ஆயிரக்கணக்கான கட்சித் தொண்டர்களும், பொதுமக்களும் காத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

எதற்குத் தெரியுமா? தங்கள் தலைவரான தமிழ்நாட்டின் முதலமைச்சர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். அவர் மிகவும் அபாய கட்டத்தில் இருந்தார். என்ன ஆகுமோ? ஏது ஆகுமோ என்று வெளியே எல்லோரும் கவலையுடன் காத்துக் கொண்டு இருக்கிறார்கள்.''

''முதலமைச்சருக்கு இன்று அறுவை சிகிச்சை என்று வானொலியிலும் பத்திரிக்கையிலும் செய்திகளைச் சொல்லிக் கொண்டும், வெளியிட்டும் இருந்தார்கள்.

புகழ்பெற்ற அந்த வெளிநாட்டு மருத்துவர்''அய்யா.. இன்று உங்களுக்கு அறுவைச் சிகிச்சை என்று முன்னரே கூறியிருந்தேன். அதற்கு நீங்கள் தயார் நிலையில் இருக்கின்றீர்களா?'' என்றார்.

அதைக்கேட்ட முதல்வர், ''டாக்டர், இன்று வேண்டாம்.. நாளை வைத்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

அதற்கு மருத்துவரோ ''ஏன்... சார், இன்று நல்ல நாள் இல்லையா? இல்லை, ஏதேனும் முக்கிய மான தகவல் உண்டா?'' என்று கேட்டார்.

அதற்கு முதலமைச்சர் சிரித்துக் கொண்டே சொன்னார்... ''அதெல்லாம் ஒன்றுமில்லை.. டாக்டர். இதோ... இந்த நூலைப் படித்துக்கொண்டு இருக்கின்றேன். இன்று இரவுக்குள் நிச்சயம் படித்து முடித்துவிடுவேன். ஒருவேளை நீங்கள் இன்று அறுவைச் சிகிச்சை செய்து; அதன்பின்... நான் பிழைக்காவிட்டால் இந்தப் புத்தகத்தை முழுமையாகப் படிக்க முடியாமல் போய்விடும், அதற்கு என் மனம் இடம் தரவில்லை''என்றார்.



இதைக்கேட்ட அந்த வெளிநாட்டு மருத்துவர். ''இப்படிப்பட்ட அபூர்வமான மனிதரை என் வாழ் நாளில் நான் இதுவரைக்கும் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை; எங்கள் நாட்டிலும் இப்படி ஒருவர் இருந்ததுமில்லை; இனி இருக்கப் போவது மில்லை.'' என்றார் நெகிழ்ச்சியுடன்.

அந்தத் தலைவர்தான் முன்னாள் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா.

**– என்.சி. ஞானப்பிரகாசம் எழுதிய 'சின்னஞ்சிறு கதைகள்' என்ற நூலிலிருந்து.**




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னை தொழில் வர்த்தக சபை ஆண்டு கூட்டத்தில் கலந்து கொண்டு விழா மலரை வெளியிட, கனடா நாட்டு தூதர் திரு ஸ்டான்லி கூச் பெற்றுக் கொண்டார். அருகில் வர்த்தகசபை தலைவர் எல். லட்சமணன் உள்ளனர். (21.6.96)

# படமும் செய்தியும்



சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி திமோதி அவுசர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசியர் திரு. க. அன்பழகன் அவர்களைச் சந்தித்து உரையாடினார். (19.6.96)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை பிரான்ஸ் நாட்டுத் தூதர் திரு. பெட்டிட் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். (21.6.96)




தமிழ்நாட்டில் புதிய மின் திட்டங்கள் தொடங்க அமெரிக்க நாட்டுத் தொழில் அதிபர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை சந்தித்துப் பேசினார்கள். (25.6.96)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தைச் சேர்ந்த ஊனமுற்ற சிறுவன் ஆர். யுவராஜ் பள்ளியில் சேர்ந்து கல்விபயில உதவிபுரியுமாறு வேண்டியுள்ளார். அச்சிறுவனின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்பையனுக்கு சென்னை பாலவாக்கத்தில் உள்ள லைப் ஹெல்ப் சென்டரில் 4ஆம் வகுப்பில் சேர்க்க உரிய ஆணையைத் தன் கையாலேயே வழங்கினார். (25.6.96)

சென்னையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு, சென்னை ஸ்ரீ மகேஸ்வரி உணவு வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட உணவு தானியங்களை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் வழங்கினார். விழாவில் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு கு. பிச்சாண்டி அவர்களும் உடன் கலந்து கொண்டார். (24.6.96)






ஒவ்வொரு மொழியிலும் எல்லாச் சொற்களும் பொருள்களைக் குறிக்கும் குறிப்பாகவே உள்ளன. பல்வேறு மொழிகள் ஒரே பொருளைப் பல்வேறு சொற்களால் குறிக்கின்றன. இதன் எதிராகப் பல்வேறு பொருள்களை, ஒரு மொழியில் உள்ள ஒரே சொல் குறிப்பதும் உண்டு. ஒரே பொருளைப் பல்வேறு சொற்கள் குறிப்பதும், பல்வேறு சொற்களை ஒரே சொல் குறிப்பதும், அந்த அந்த மொழியின் வளர்ச்சிக்கும் செறிவுக்கும் ஏற்ப நிறைந்து காணப்பெறும். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டுத் தோன்றிய இலக்கணமாகிய தொல்காப்பியம், இதனை,

**'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'**

**(தொல்காப்பியம்-சொல்-பெயரியல்-1)**

**'வினை வேறுபடூஉம் பலபொருள் ஒரு சொல் ஆயிரு வகைய - பலபொருள் ஒரு சொல் ஒரு வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல்'**

**(சொல்-கிளவி-52)**

*Values என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் எது என ஆயும் இக்கட்டுரை சொல்லாய்வாக மட்டும் அல்லாமல் பொருளாய்வாகவும் பொலிவுறுகிறது.*

என்று கூறிச்செல்கிறது. வளர்ச்சி அடைந்துள்ள எல்லா மொழிகட்கும் இது பொருந்தும். இவ்வாறு கூறுவதால் ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களும் எவ்வித வேறுபாடும் இல்லாமல், தம்முள் பொருளைக் குறிக்கும் ஆற்றலைச் சுயமாகப் பெற்றுள்ளனஎன்பது குறிப்பாம். இரண்டு சொற்கள் ஒரே பொருளைக் குறித்தாலும், அவற்றுள் ஓசை முதலிய வேறு பாட்டால் ஓரளவு நுண்மையான வேறுபாடு உண்டு. இதனால்தான் கவிதை சிறக்கின்றது. கவிஞன் கூறவந்த ஒன்றைக் குறிப்பதற்கு, ஒன்றுக்கு மேம்பட்ட பல சொற்கள் இருப்பினும், அவற்றுள் சிறந்த ஒரு சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துபவனே, சிறந்த கவிஞன்.

சிறந்த ஒரு சொல்லைத் தேர்ந்து கொள்வது அவனுடைய கல்வி, அறிவு, கேள்வி, அனுபவத்தின் அடிப்படையிலே நடைபெறும்.

**உயிரோட்டமுள்ளது சொல்**

இதனால்தான், ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு ஆக்கஞ் செய்வது கடினமாக ஆகிவிடுகிறது. மூலத்தில் உள்ள ஒரு சொல் பன்னூறு ஆண்டுகளாக அம்மொழியில் உள்ள பல அறிஞர்களாலும், கவிஞர்களாலும் பயன்படுத்தப் பெற்று, மெருகு ஏற்றப் பெற்றுள்ளது. இக்கருத்தை விளக்கவந்த அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதியும், தலைசிறந்த திறனாய்வாளரும் ஆகிய ஆலிவர் வென்டால் ஹோம்ஸ் என்பார், 'ஒரு சொல் என்பது வைரம் போன்று ஒரே மாதிரியாக என்றும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் என்பது சரியன்று; எண்ணங்கள் என்பவற்றின் மேல் போர்த்தப்பட்டுள்ள உயிரோட்டமுள்ள தோல் போன்றது சொல். அது தோன்றும் நேரம், இடம் என்பவற்றிற்கேற்ப அதன் பொருளும் இயல்பும் மாறுபடும்' என்று கூறுவது சாலப் பொருத்தம் உடையதாகும்.

ஆங்கிலத்தில் உள்ள பல சொற்களைத் தமிழில் பெயர்ப்பது இயலாத காரியம். அதேபோலத் தமிழில் உள்ள பல சொற்களை ஆங்கிலம், வடமொழி முதலிய பிறமொழிகளில் பெயர்ப்பதும் இயலாத காரியம். அறம் என்ற தமிழ்ச் சொல்லைத் தர்மம் என்று கூறுவது பொருந்தாது.

**ஓரளவு பொருத்தமுடையது**

ஆங்கிலத்தில் 'வேல்யூஸ்'(values) என்ற ஒரு சொல் உண்டு. இதற்கு விளக்கம் தரவந்த ஆக்ஸ்பர்ட் அகராதி, 'எவற்றை வேறு பயன் கருதாமல் அவற்றுக்காகவே உயிரினும் சிறந்ததாக மதிக்கிறோமோ, அவையே 'வேல்யூஸ்' என்ற சொல்லின் பொருளாகும்' (That which is esteemed for its own sake) என்று கூறுகிறது. எனவே, இச் சொல்லை நேரடியாக மொழி பெயர்க்க முடியாவிடினும், இதனுடன் ஓரளவு பொருத்தம் உடைய தமிழ்ச் சொல்லைத் தேடினால் 'விழுப்பொருள்கள்' என்பது ஓரளவு, பொருந்துவதாக உள்ளது.

**... கவிஞன் கூறவந்த ஒன்றைக் குறிப்பதற்கு, ஒன்றுக்கு மேம்பட்ட பல சொற்கள் இருப்பினும், அவற்றுள் சிறந்த ஒரு சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துபவனே, சிறந்த கவிஞன்...**

**... ஆங்கிலத்தில் உள்ள பல சொற்களைத் தமிழில் பெயர்ப்பது இயலாத காரியம். அதேபோலத் தமிழில் உள்ள பல சொற்களை ஆங்கிலம், வடமொழி முதலிய பிற மொழிகளில் பெயர்ப்பதும் இயலாத காரியம். ..**

**குறிப்பே சொல்லின் உயிர்நாடி**

ஒருவன் ஒரு சொல்லைப் பயன்படுத்தும் பொழுது, அச்சொல் ஆயிரம் ஆண்டுகளாக அவன் முன்னோர்கள், அறிஞர்கள், கவிஞர்கள் என்பவர்களால், பயன்படுத்தப்பட்டிருத்தலின், அத்துணை நுண்மையான பொருள் வேறுபாடுகளுடன் கேட்போன் செவியில் நுழைகின்றது. கேட்பவனுடைய தகுதி, கல்வி, கேள்வி, அனுபவம் என்பவற்றிற்கு ஏற்ப அவன் மனத்தில் அச்சொல் பொருளை ஆழத்துடன் விளக்குகிறது; இத்தனை பொருள்களையும் நேரிடையாக அச்சொல் விளக்குவது இல்லை. குறிப்பால் உணர்த்தும் இயல்பு சொல்லுக்கு உண்டு.

**விழுப்பொருள்கள் இருவகை**

இம்முறையில் 'விழுப்பொருள்கள்' என்று கூறும் பொழுது வேறு ஒரு பயனையும் கருதாமல், எவ்வெவற்றைத் தம் உயிரினும் சிறந்தவை என்று இத் தமிழர் கருதினார்களோ, அவற்றையே ஈண்டு குறிக்கிறோம். இந்த விழுப்பொருள்கள் தனிமனிதனுக்கு உரியவை, சமுதாயத்துக்கு உரியவை என இருவகைப்படும். இவ்வாறு கூறுவதாலும், விழுப்பொருள்கள் என்று பெயர் கூறுவதாலும், இவை பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக மாறாமல் இருப்பவை என்று யாரும் கருதிட வேண்டா. இவ் விழுப் பொருள்களுள் 'மாறும் விழுப் பொருள்கள்' 'மாறா விழுப்பொருள்கள்' என இருவகை உண்டு.

**மாறும் விழுப்பொருள்கள்**

'தனி மனிதன் போற்றும் விழுப்பொருள்கள்' என்று கூறும்பொழுது அவனை ஒத்த தனி

மனிதர்கள் அனைவரும் அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைப்பது சரியன்று. ஒரு சமுதாயம் ஒரு கால கட்டத்தில், விழுப் பொருள்கள் என்று ஏற்றுக் கொண்ட ஒன்றை, அதே சமுதாயம் பிறிது ஒரு காலகட்டத்தில், அதையே விழுப்பொருள்கள் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. இவை அனைத்தும் 'மாறும் விழுப் பொருள்கள்' எனப்படும்.


**மாறா விழுப்பொருள்கள்:**

இதன் எதிராகச் சிலவற்றை மாறா விழுப்பொருள்கள் என்று தனி மனிதர்களும், சமுதாயமும், ஏற்றுக்கொள்வதுண்டு. பிறருக்குத் தீங்கு நினைக்கவோ, செய்யவோ கூடாது. தன்னலத்தைத் துறந்தேனும், பிறருக்கு நலஞ் செய்ய வேண்டும் என்பவை போன்ற விழுப்பொருள்கள் மாறா இயல்புடையவை என்று கருதப்பெறுபவை, ஏறத்தாழ எல்லாச் சமுதாயங்களும் இப் பொதுவான விழுப் பொருள்களைப் போற்றும் இயல்புடையன. இவற்றைப் போற்றும் சமுதாயத்தை நாகரிகம் முதிர்ந்த சமுதாயம் எனக் கூறுகிறோம்.

*அருந்தமிழறிஞர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களின் 'கம்பன் புதிய பார்வை' நூலிலிருந்து.*

---

# லேசர் என்பது லேசானதல்ல!



சாதாரணமாக கண் அறுவை சிகிச்சை என்றால் நோயாளி குறைந்தது ஒரு வாரகாலமாவது மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டும் என்று தானே நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அண்மையில் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள ஒரு பெரிய கண் மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஒரு நோயாளி ஒரே நாளில் மருத்துவ மனையை விட்டு வந்த ஒரு அறிவியல் அதிசயம் நிகழ்ந்தது.

இந்த அதிசயத்தை நிகழ்த்தியது, இன்னொரு உலகப்போர் வந்தால் அதில் தலையாய பங்கு வகிக்கப் போகும் தளபதி என்று எல்லோராலும் நம்பப் படுகிற 'லேசர் கதிர்' தொழில் நுட்பம் ஆகும்.

லேசர் என்று அழைக்கப் படும் இந்த அறிவியல் தொழில் நுட்பத்தைத் தமிழில் தூண்டப் பட்டக் கதிர் வீச்சினால் ஒளிப் பெருக்கம் என்று அழைக்கிறார்கள். உண்மையில் லேசர் என்பதற்கு (Light Amplification by Stimulated Emission of Light) என்ற சொற்றொடரின் முதலெழுத்து குறுக்கமே (Laser) எனலாம்.

லேசர் கோட்பாட்டை முதன் முதலில் தோற்றுவித்தவர்கள் அமெரிக்க விஞ்ஞானிகளான டவுனெஸ், ஸ்சாலோவும் ரஷிய நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள்பாசவ், ப்ரோகாரோ ஆகியோரும் ஆவர்.

இருந்தாலும் முதன் முதலில் லேசர் கருவியை உருவாக்கிய பெருமை அமெரிக்க நாட்டு விஞ்ஞானியான தியோடர் மாய்மான் என்பவரை சாரும். இவர் செயற்கையான மாணிக்கக் கல்லை தனது ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தினார்.

லேசர் விளக்கின் ஒளி-அதாவது ஒரு மில்லி வாட் (ஆயிரத்தில் ஒரு பங்கு) லேசர் ஒளியானது மனிதனின் கண்களையே குருடாக்கும் பிரகாச முடையது என்று கருதப்படுகிறது.

மருத்துவத்துறையில் கொடிகட்டிப் பறக்கப் போகும் லேசர் கதிர்கள் அதிகமாகப் பயன்படுவது கண் அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் சிகிச்சைகளில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

> உழைக்காமல் வாழ்பவர் உலகில் அதிகம்; வாழாமல் உழைப்பவர் அவர்களைவிட அதிகம்.
> – சார்லஸ் ஆர். பிரௌன்

> கடினமான செயலில் முயற்சியோடு உழைக்கும் எவரும் தன்மானத்தை இழப்பதில்லை.
> – ஜார்ஜ் பெர்னார்ட்ஷா

# அறிவியல் துளிகள்

## வியக்க வைக்கும் வெப்ப நீரூற்று

அந்தமான், நிகோபார் தீவுகளுக்கு அருகே கடலில் வெப்ப நீரூற்றுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அப்பகுதி கடல்நீரின் வெப்ப நிலை 300 டிகிரி செல்சியசாக இருக்கிறதாம். இப்படி வெப்ப நீரூற்று உள்ள பகுதிகளில் தங்கம், வெள்ளி, பிளாட்டினம் போன்ற கனிம உலோகம் கிடைக்கும் என்று சொல்லப் படுகிறது.

## 'இ' இருந்தால் முதுமை வாராது!

விட்டமின் 'இ' யை அதிகம் சேர்த்துக் கொள்ளுவோருக்கு அவ்வளவு சீக்கிரம் முதுமை வராதாம். அமெரிக்க நாட்டுத் தேசிய அகாடமி நடத்திய ஆய்வு மூலம் இது தெரிவிக்கப் பட்டிருக்கிறது.


## சுற்றுச் சூழலைக் கெடுக்கும் உணவகங்கள்



வளைகுடா நாடுகளில் சீனர்கள் நடத்தும் உணவு விடுதிகள் அதிகம்; அங்கெல்லாம், சுறா மீன் 'சூப்'பிற்குத்தான் கிராக்கி அதிகமாம். சுறாமீனின் தேவை யற்ற உடற்பகுதிகள் வெட்டி கடலில் வீசப்படுவதால், வளைகுடாவே அதிகமாக மாசு பட்டிருப்பதாகக் கண்டறியப் பட்டிருக்கிறது.

## மாசுபடுத்தாத கார்


சுற்றுப்புறச் சூழல், கார் போன்ற வாகனங்களால் மாசுபடுகிறது என்கிறோ மல்லவா? அப்படி மாசு படுத் தாத கார்களில் முதன்மையானது என்பதற்கான விருது 'மாருதி 1000' காருக்கு அளிக்கப் பட்டிருக் கிறது. ஜெர்மனியைச் சேர்ந்த 'ஆட்டோ மொபைல் சங்கம்' இந்த விருதை அளித்திருக்கிறது.




## உடல்நலம் காக்கும் பருத்தி ஆடைகள்

நம் நாட்டுப் பருத்தி ஆடைகள் மேல், அமெரிக்க ஐரோப்பிய நாட்டு மக்களுக்கு ஆவல் ஏற்பட்டிருக்கிறது. அண்மையில் சென்னையில் நடந்த கருத் தரங்கில் இக்கருத்து தெரிவிக் கப்பட்டது. மேலும், அவர்கள் விரும்பத்தக்க ஆடைகள் வடிவமைப்பில் நாம் தனிக் கவனம் செலுத்தினால் இந்திய ஆடை ஏற்றுமதி பெருகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. பருத்தி ஆடைகளே உடல்நலம் காக்கும் என்கிறார்கள் மருத்துவர்கள். ஆனால் நாம் அதைக் காதில் போட்டுக் கொள்கிறோமோ!

## மிகப் பிரம்மாண்டமான மிருகம்



மொராக்கோ நாட்டின் தென் பகுதியில் இருக்கின்ற சகாரா பாலைவனப் பகுதியில் ஒரு பிரம்மாண்டமான டைனோசர் தலை கண்டுபிடிக்கப்பட் டிருக்கிறது. 5 அடி 4 அங்குல நீளத்தில் தலை எலும்பு மட்டும் இருக்கிறதாம். அப்படி யானால், இந்த விலங்கு 45 அடி நீளமும், 12 அடி உயரமும் உள்ளதாக இருந்திருக்கும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.



## புகை உயிருக்கு பகை இதை உணராதோ உலகம்!

**பு**கைபிடிக்கும் வழக்க முடையோர் பற்றி உலகளாவிய அளவில் கணக்கெடுத்திருக்கிறார்கள்; அப்படி எடுத்த போது தெரிந்தவை இவை; உலக அளவில் சுமார் 110 கோடிப்பேர் புகைக்கு அடிமையானவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் 15 வயதினர் அல்லது முதியோர். 1980 முதலே, வளர்ந்துவிட்ட நாடுகளில் புகை பிடிப்போர் எண்ணிக்கை குறைந்து வரும்போது வளரும் நாடுகளில் அந்த எண்ணிக்கை கூடிவருகிறது; 'புகை உயிருக்குப் பகை' என்று அறிவியல் அறிஞர்கள், மருத்துவ மேதைகள் சொல்லுவதெல்லாம் எடுபடவில்லை. கி.பி. 2020 ஆம் ஆண்டுவாக்கில் புகைப்பழக்கத்தால் மட்டும் ஓராண்டுக்குச் சுமார் ஒரு கோடிப்பேர் மாண்டுபோவார்கள் என்றெல்லாம் உலக சுகாதார அமைப்பின் ஆய்வு தெரிவிக்கிறது.

அதிக அளவில் புகைபிடிப்பதால் புற்றுநோய், மாரடைப்பு போன்றவை உண்டாகிறது என்கிறார்கள் மருத்துவர்கள். புகையிலை தொடர்பான இது போன்ற நோய்களால் மட்டும் இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 15 இலட்சம் பேர் இறந்து போகிறார்கள் என்று ஒரு கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.



## உற்றுழி உதவ ஒரு புதுமுறை!

**ஸ்**கைசெல் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் விரைவிலேயே செல்லுலர் போன் வைத்திருப்போருக்காக ஒரு நூதனத் திட்டத்தைக் கொண்டுவரவிருக்கிறது. இதன் பணி என்னவென்றால், இவர்களோடு செல்லுலர் போன் மூலம் தொடர்பு கொண்டால், நாம் பயணம் தொடர ஊர்வலம் போவது போன்ற சங்கடம் இல்லாத பாதை சொல்லப்படும்; முக்கியப் பங்குகளின் விலை விவரம் தெரிவிக்கப்படும். இன்னும் இப்படி எத்தனையோ வகையில் நமக்கு உதவுவதாக இந்த அமைப்பு செயல்படும்!


## காணவேண்டிய கண்காட்சி அரங்கு

**ஜெ**ர்மனியில் உள்ள லேப்சிக் மிகப் பெரிய வர்த்தக நகரமாகும். உலகிலேயே மிகப் பெரிய கண்காட்சி அரங்கை இங்கே உருவாக்கியிருக்கிறார்கள். இரண்டாண்டுகளுக்கு முன்னால் கட்டத் தொடங்கிய அந்த அரங்கம் 9,86,222 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக அண்மையில்தான் முடிவடைந்திருக்கிறது. இந்த அரங்கில் அறிவியல் சமாச்சாரங்கள் பெருமளவில் இடம் பெறுமாம்.

## கப்பல்களை மோதவிடும் கடும் மூடுபனி

**ம**ப்புமந்தாரமற்ற இரவில் தரைக்குச் சற்று மேலுள்ள சூடான காற்றானது, தரை மட்டத்திலுள்ள குளிர்ந்த காற்றிலுள்ள ஈரத்தை உறிஞ்சிக் குளிர்ச்சிடையும். ஒரு குறிப்பிட்ட அளவு குளிர்ச்சி அடைந்ததும் அதற்குமேல் ஈரத்தை உறிஞ்சமுடியாது. இந்த வெப்பநிலையைப் 'பனிநிலை' என்பர். பனிநிலைக்கும்கீழ் அக்காற்றின் வெப்பநிலை குறையுமானால் அதிலுள்ள நீராவி நீர்த்துளிகளாக மாறி மூடுபனியாகத் தரைமட்டத்தில் படிகிறது.

மிகக் கடுமையான மூடு பனியாயிருந்தால் போக்கு வரத்து தடைபடும். விமானங் களை ஓட்ட மாட்டார்கள், கப்பல்களும் எங்காவது மோதி விடக்கூடும். சாலைகளில் விபத்துக்கள் நேருவதுண்டு.



## விந்தை செய்யும் கம்ப்யூட்டர்

பிட்மேன் பிளஸ் என்கிற ஒரு மிகச்சிறிய கம்ப்யூட்டர் நாம் சொல்லுவதை அப்படியே பதிவு செய்து கொள்ளும் ஆற்ற லுடையதாக இருக்கிறது! பேச் சாளர்களின் சொற்பொழிவு களையும் இதன் மூலம் பதிவு செய்யலாம்; அதைக் காதில் பொருத்திக்கொண்டு நிறுத்தி நிறுத்திக் கேட்டுதட்டச்சுசெய்து விடலாம். இதை அப்படியே ஒலிவடிவில் ஃபைல் செய்தும் வைக்கலாமாம்!

சென்னையில் உள்ள 'பேஸ் ஆட்டோமேஷன் லிமிடெட்' நிறுவனம் அற்புதச் சாதனம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருக் கிறது. இதன்மூலம் மிகப்பெரிய நிறுவனங்கள் வேலைக்கு வரு வோர், வராதவர்கள், அவரவரும் செய்கிற வேலையின் அளவு போன்றவற்றைக் கணக்கெடுக்க முடியுமாம். மாதக் கடைசியில் அச்சாதனம் காட்டும் வழி முறைப்படியே ஊதியம் தரப் படுவதும் எளிதாக இருக்கு மல்லவா?

# போர்களின் முடிவை நிர்ணயிக்கும் ராடார்:

ரேடியோ அலைகள் என்பவை மின்காந்த அலைகள் ஆகும். ரேடியோ அலைகள் ஏதாவது ஒரு பொருள்மீது மோதினால் அவை பிரதிபலித்துத் திரும்பு கின்றன. இந்த அலைகள் திரும்பும் நேரத்தைக் கணக் கிட்டு அந்தப்பொருள் எவ்வளவு தொலைவிலிருக் கிறது என்று குறித்துக் கொள்ளலாம்.


ஒரு பொருளின் இருப் பிடத்தையும் தொலைவினை யும் ரேடியோ அலைகளைக் கொண்டு அறிதல் என்பதற்கான ஆங்கிலச் சொல்லின் சுருக்கமே ராடார் ஆகும்.

ராடார் கருவியைக் கண்டு பிடிப்பதற்கு வெளவால் வழி காட்டியாக இருந்தது எனலாம். வெளவால்கள் மண்டபங் களிலும், குகைகளிலும் மிக வேகமாய்ப் பறந்தாலும் அவை எதன்மீதும் மோதிக்கொள்வ தில்லையல்லவா? மிகக்கூர்மை யான கண்பார்வை இருப்பதே இதற்குக்காரணம் என்று முதலில் கருதினர். ஆனால் வெளவாலின் கண்களைக் கட்டிய பின்னரும் அது எங்கும் மோதிக்கொள்ளாமல் பறப் பதைக் கண்டார்கள். வாயையும் காதையும் கட்டிய போது அது நிலைதடுமாறியது.

இதிலிருந்து வெளவால் எழுப்பும் ஒலி, பொருள்களின் மீது மோதித்திரும்புவதிலிருந்து எதிர்ப்படும் தடைகளை அது அறிந்து விலகிச்செல்கிறது என்று அறிவியலறிஞர்கள் முடிவு செய்தார்கள். இந்த ஆராய்ச்சியே ராடாரை அமைப்பதிலும் பின்பற்றப் படுகிறது. ஆனால் ராடாரில் ஒலிக்குப் பதிலாக ரேடியோ சிற்றலைகள் பயன்படுத்தப் படுகின்றது.

ஒலி அலைகள் வினாடிக்கு 330 மீட்டர் வேகத்தில் செல்லுகின்றன. ஆனால் ரேடியோ அலைகள் வினாடிக்கு 3,00,000 கிலோ மீட்டர் வேகத்தில் செல்கின்றன. அதா வது ஒரு மைக்ரோ வினாடியில் 300 மீட்டர் தொலைவு செல் கிறது.

போர்க்காலங்களில் ராடார் மிகவும் பயன்படுகிறது. நீர் மூழ்கிக் கப்பல்கள் இருக்கும் இடங்களைத் தெரிந்து கொள்ளவும், விமான நிலை யங்களில் விமானங்கள் ஒழுங் காக இறங்குவதற்கு வழி காட்டவும் வானிலையைக் கண்டறியவும் ராடார் பயன் படுகிறது.



வெளவால்களே-
ராடாரின் முன்னோடி

# செய்திச் சரம்

## திரையுலகினர்க்கு உதவிக்கரம்

குறைந்த அளவில் முதலீடு செய்து தயாரிக்கப்பட்டு 1995-ஆம் ஆண்டு வெளியான தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்குவது குறித்துப் பரிசீலனை செய்து, சிறந்த படங்களை அரசுக்குப் பரிந்துரை செய்வதற்காக 15.6.96 அன்று திரு பரிதி இளம்வழுதி (சட்டப் பேரவைத் துணைத்தலைவர்) அவர்கள் தலைமையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அக்குழுவில் திருமதி. எம்.என். ராஜம், திருமதி சரோஜா தங்கவேல், செயலாளர் செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, இணை ஆணையர் வணிக வரித்துறை, துணைச் செயலாளர் உள்துறை, முதல்வர் தமிழ் நாடு திரைப்படத் தொலைக்காட்சி நிறுவனம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

### இசைக் கல்லூரி நிர்வாகிகள்

சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள இசைக் கல்லூரிகளின் கௌரவ இயக்குநராக, இசையமைப்பாளர் திரு. டி.ஆர். பாப்பா அவர்கள் அமர்த்தப் பட்டிருக்கிறார். சென்னை இசைக்கல்லூரியின் முதல்வர் திரு. திருப்பாம்புரம் சண்முகசுந்தரம் அவர்களுக்கு, மேலும் ஓராண்டிற்கு அவருடைய பதவிக்காலம் நீட்டிக்கப்படுகின்றது என அரசு 16.6.96 அன்று அறிவித்தது.

### இயல், இசை, நாடக மன்றம்

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவராக திரு இராம நாராயணன் அவர்களும், செயலாளராக நடிகர் திரு. சந்திரசேகர் அவர்களும், துணைச் செயலாளராக திரு.கே. சொர்ணம் அவர்களும் உறுப்பினர்களாகத் திருவாளர்கள் பேராசிரியை அரசு மணிமேகலை, தஞ்சாவூர் டி.ஆர். சீனிவாசன், அரித்துவாரமங்கலம் ஏ.கே. பழனிவேலு, புஷ்பவனம் குப்புசாமி, கயல். கோ. தினகரன், பேராசிரியை சாரதா நம்பியாரூரன், டி.எஸ். இலட்சப்பா ஆகியோரும் 17.6.96 முதல் அமர்த்தப் பட்டனர்.

## 'ஆவின்' மாம்பழச்சாறு



இந்தியாவின் தலைசிறந்த பால்வள நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் நமக்குப் பால் விநியோகிப்பது மட்டுமல்ல; இப்போது இனிக்கும் மாம் பழச்சாறு வழங்கவும் முன் வந்திருக்கிறது; இயற்கையான மாம்பழச் சாற்றை ஆறுமாதங்கள் வரை கெட்டுப்போகாத வண்ணம் பதப்படுத்தி மிக நவீன 'டெட்ராபேக்' என்ற அட்டைப்பெட்டிகளில் அடைத்து விற்பனைக்குவிட முடிவு செய்துள்ளது. அதிலும், தமிழ்நாட்டின் மாங்கனி நகரான சேலத்தில் அமையப்பெற்ற பால் பண்ணையில், ஆவின் மாம் பழச்சாறு உற்பத்தி செய்யப் படும். இதன் மூலம் ஆவின் நிறுவனத்திற்கு அன்னியச் செலாவணியை ஈட்ட வாய்ப்புக்கிடைக்கிறது.

**சுவை மிக்கது சுத்தமானது**

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் திருப்பெரும்புதூர் காவல் நிலையத்தில் 30.4.95 அன்று காவல் துறையின் பொறுப்பில் இருந்த திரு தங்கமணி என்பவர் இறந்து விட்டார். அவரது குடும்பத்தினரின் வறிய சூழ்நிலையைக் கருதி அன்னாரது மனைவிக்கு 'முதலமைச்சர் பொது நிவாரண நிதியில்' இருந்து உதவி நிதியாக ரூ. 50 ஆயிரம் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டு உள்ளார்.

**காவலர் குடும்பத்திற்கு முதல்வர் நிதியுதவி**

தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி - தொழிற்பயிற்சி - செய்திப்படப் பிரிவு இயக்குனராக ஒளிப்பதிவு வல்லுநர் திரு.பி. அமிர்தம் நியமிக்கப்பட்டுள்ளார்.

எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் தலைவராகத் திரைப்படத் தயாரிப்பாளரும் இயக்குநருமான திரு முக்தா வி. சீனிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

### வரலாறு காணாத பெருமழை

கடந்த நூற்றாண்டுக்காலமாக இல்லாத அளவிற்கு அண்மையில் பெய்த பெருமழை காரணமாகச் சென்னை மாநகரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அவ்வாறான பகுதிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் நேரில் சென்று பார்த்தனர்; பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறினர்; உணவுப் பொருட்களை வழங்கினர்.

## பாதிக்கப்பட்ட இராணுவத்தினருக்கு அரசு உதவி

இராணுவத்தில் பணியாற்றும்போது உயிரிழந்த - அல்லது உடல் உறுப்புகளை இழந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த போர் வீரர்களுக்கு 1971 முதல் தமிழக அரசினால் வழங்கப்பட்டு வரும் கருணைத் தொகையை, 25 ஆண்டுகளுக்குப் பிறகு கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

போர் முனையில் உயிரிழந்தோர் குடும்பத்தினர்களுக்கும், இரு கை அல்லது இரு கால்களையும் இழந்தவர்களுக்கும், ஒரு கண் பார்வையை இழந்தவர்களுக்கும் செயல்பட முடியாத நிலைக்கு ஆளானோர்க்கும் தற்போது வழங்கப்படும் கருணைத் தொகை 5,000/- ரூபாய் ஆகும்; இனி அது ரூ. 20,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

ஒரு காலை இழந்தவர் மற்றும் வேலை செய்ய முடியாமல் கையையோ விரல்களையோ இழந்தவர்க்குத் தற்போது வழங்கப்படும் கருணைத் தொகை முறையே ரூ. 4,000/- மற்றும் ரூ. 3,000/- ஆகும்; இனி அது ரூ. 10,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

ஒரு கண் பார்வையை இழந்தவர்கள், தீக்காயம் அடைந்தவர்கள், துப்பாக்கியால் சுடப்பட்டதால் காயம் அடைந்தவர்கள் மற்றும் போர்முனையில் ஏற்படும் விபத்துக்களால் எலும்பு முறிவு ஏற்பட்டவர்கள் ஆகியோருக்குத் தற்போது வழங்கப்படும் கருணைத் தொகை முறையே ரூ. 4,000/- ரூ. 2,000/- ரூ. 1,000/- என்று இருப்பதை இனி ரூ. 5,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**செய்திச் சரம்**

மருத்துவக் கட்டுரை:

# தலைவலி

டாக்டர் ஜி. சுந்தரமூர்த்தி எம்.டி.,

'தலை இருக்கும்வரை தலைவலி இருக்கத்தான் செய்யும்' என்று சிலபேர் நகைச்சுவை தோன்றச் சொல்லுவார்கள்; அதற்காகத் தலையை வெட்டிப் போட்டு விட முடியுமா என்ன?'' எண் ஜாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் அல்லவா!

வேகாத வெயிலில் சுற்றி விட்டு வரும் சிலருக்குத் தலையே வெடித்துவிடும் போல 'வின்வின்' னென்று தெறிக்கும்; என்ன மருந்தைத் தடவினாலும் வலி குறையாது; அதற்கு மாறாகக் கண்ணெரிச்சல் உண்டாகிவிடும்.

மழையில் நனைந்து விட்டு வந்து தலையைத் துவட்டிக் கொண்டாலும் சிலபேருக்கு ஒத்துக்கொள்ளாது; தலைவலி உண்டாகிவிடும்.

வியர்க்க விறுவிறுக்க வேலை பார்த்து விட்டு வந்து 'அப்பாடா' என்று ஒய்வாக உட்காருகிற சிலரும் நெற்றிப் பொட்டைப் பிடித்துக் கொண்டு' என்ன வலி' என்று தனக்குத்தானே முனகுவார்கள்.

நேற்றுவரை 'கொட்டு கொட்டென்று' விழித்துப் பார்த்துக் கொண்டிருந்திருப்பார்கள் சிலர்; இன்றைக்குப் பார்த்தால் மூக்குக் கண்ணாடி அணிந்திருப்பார்கள். என்ன சங்கதி என்று கேட்டால் 'தலைவலிக்காக' என்பார்கள்.

தலைவலிக்காக ஏராளமான மருந்து, மாத்திரை, தைலம், களிம்பு (Ointment) எல்லாம் வந்திருக்கின்றன; கிராமப்புற மக்களோ - வெற்றிலைக் காம்பு, பூண்டு, வெங்காயத்தையெல்லாம் நெற்றியில் கைமருந்தாகத் தேய்த்துக் கொள்ளுவார்கள்.

இவ்வளவுக்கு மேலும் தலைவலி நீங்காதபோதுதான், பலருக்கும் மருத்துவரைத் தேடிப்போகும் நினைப்பே வரும்!

எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரி மருந்து போடுவதை விட, மருத்துவரிடம் போய்க் காட்டுவதுதான் நல்லது.

**தலைவலிக்கான காரணங்கள்:**

தலைவலி என்பது ஒரு நோயே அல்ல; அது ஒரு நோயின் வெளிப்பாடு அல்லது அறிகுறியே யாகும்.

தலைவலி உண்டாவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. தலைவலி ஒரு சாதாரண நோயின் அறிகுறியாகவோ அல்லது ஒரு பயங்கரமான நோய் வருவதற்கான அறிகுறியாகவோ கூட இருக்கலாம்.

சாதாரண நோயின் வெளிப்பாடு என்பது உணர்ச்சிக் கொந்தளிப்பால் உண்டாகக் கூடும்; பயத்தால் வரும்; பசியின் காரணமாக ஏற்படும்; தூக்கமின்மை அல்லது கடுமையான வெயில் காரணமாகவும் தலைவலி உண்டாகும்.

இவ்வாறான சில காரணங்களால் வருகின்ற தலைவலியால் உடலில் அப்படியொன்றும் பெரிய பாதிப்பு ஏற்படாது; அந்தந்தக் காரணங்களுக்கு நிவாரணம் கண்டாலே போதும்; தலைவலி பறந்து விடும்.

**நிவாரணங்கள்:**

உதாரணத்திற்குச் சொல்லுவதானால் - பசி காரணமாகத் தலைவலி ஏற்படுகின்றதென்றால் சிறிது நேரம் தூங்கி எழுந்தாலே போதும்; தலைவலி மறைந்து விடும்.

வெயிலில் சுற்றிவிட்டு வருவதால் தலைவலி உண்டாகியிருக்கிறதென்றால், பாதிக்கப்பட்ட நபர் Heat Exhaustion என்கிற ஒரு மாற்றத்திற்கு



ஆளாகியிருக்கிறார் என்று அர்த்தம். அப்படிப்பட்டவர் சிறிது உப்புக்கரைசல் சாப்பிட்டாலே சரியாகிவிடும்.

'Heat Stroke' என்ற மிகக் கடுமையான வெப்ப நோய் வந்தால், உடனே மருத்துவ மனையில் அவரைச் சேர்த்தாக வேண்டும். அவர் உடலில் கூடுதலானவெப்பம்ஏறிவிடுவதே அந்தப் பாதிப்பின் காரணம்; அவரை உடனே மருத்துவ மனைக்குக் கொண்டு போகாவிட்டால் அந்தநபரை நாம் இழக்கின்ற நிலைமையே கூட ஏற்படக்கூடும்.

வேலைப்பளு, அச்ச உணர்வு, குற்ற உணர்வு, மிக நெருக்கமானவர்களோடு விரோதம் அல்லது பிணக்கு போன்ற மன அழுத்தம் காரணமாகவும் தலைவலி வரும்; அந்தந்தக் காரணங்கள் நீங்கினாலே தலைவலியும் நீங்கிவிடும்.

வேறெந்தக் காரணத்தாலாவது தலைவலி வந்திருக்குமோ என்று அவர்கள் தம்மைப் பரிசோதித்துக் கொண்டால், எவ்வித நோயும் தமக்கு வந்திராததை அவர்களால் உணரமுடியும்.

**நோய்களால் தலைவலி:**

நோயின் காரணமாக வருகின்ற தலைவலியை நாம்-

தலைக்கு வெளியே வரும் நோய்கள்.

தலைக்கு உள்ளே வரும் நோய்கள்

– என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

இதில், முதலாம் வகைத் தலைவலிக்கு சாதாரண நோயும் காரணமாக இருக்கும்; உயிரைப் போக்கக்கூடிய கடுமையான நோயும் காரணமாக அமையும். அவை:

அ. தமனி மற்றும் சிறைகள் போன்ற இரத்த நாளங்களில் ஏற்படும் மாற்றங்களால் வரும் (Vascular Headache) தலைவலிகள் ஒற்றைத் தலைவலி (Migraine), பரவலான தலைவலி (Cluster Headache), முதியவர்களுக்கு வரும் தலைவலி (Gianticll Arteritis), ஒற்றைத் தலைவலி அல்லாத மற்ற தலைவலிகள் (Non-Migrainous Vascular Headache) போன்றவைகளாகும்.

ஆ. தேவையற்ற பதற்றத்தாலும் இறுக்கத்தாலும் வரும் தலைவலி (Tension Muscle Contraction Headache).

இ. முகக்காற்றுத் துவாரங்களால் வருவது (Sinus Headache).

ஈ. கண்களில் ஏற்படும் நோய் காரணமாக வருவது (Ocular).

உ. காதுகளில் உண்டாகும் நோய் காரணமாக வருவது.

ஊ. பற்களில் வரும் நோயால் ஏற்படுவது.

எ. நரம்புகளில் ஏற்படும் பாதிப்புகளால் உண்டாவது.

ஏ. கழுத்து எலும்பிலும், மற்ற எலும்புகளில் இணைந்த திசுக்களில் உண்டாகும் நோய்களின் மூலமும் வருவதுஎன அவை பலவாகும்.

– இவைகள் யாவும் கபாலத்தின் மேற்பகுதியால் உணரப்படும் தலைவலிகளாகும்.

**உட்பகுதித் தலைவலி**

தலையின் உள்ளே உண்டாகும் தலைவலிகள் கீழ்க்கண்டவாறு ஏற்படும்:

அ. மூளையில் உண்டாகும் கட்டிகள் (Tumours)

ஆ. சீழ்க்கட்டிகளால் உண்டாகும் (Abscess).

இ. கபாலத்தின் உட்பரப்பைப் பாதுகாக்கும் மேற்பகுதியின் ஊடே ஏற்படும்.

ஈ. இரத்தக் கட்டிகள் மூலம் (Ebi or subdural or Paraenchymal Haematoma) வரும்.

ஈ. முதுகுத் தண்டில் தேவையின்றி உற்பத்தியாகும் நீரை ஊசிமூலம் எடுத்த பிறகு உண்டாகும் (Post lumbar Puncture Headache).

உ. தலையின் உட்பகுதியில் இரத்தம் கட்டுதல், புண் ஏற்படுதல், மூளை மற்றும் அதைச் சார்ந்த பகுதிகள் பாதிக்கப்படுவதானலும் வரும்.

–இவ்வாறானதலைவலிகள் கபாலத்தின்உட்புறத்தில்உண்டாகி உபத்திரவம் கொடுக்கும்.

இந்த இரண்டு வகையிலும் கட்டுப்படாத சில காரணங்களினாலும் தலைவலி உண்டாவதுண்டு. அவற்றின் விவரம் பின்வருமாறு:

அ. உணர்ச்சி வசப்படுதல்.

ஆ. மனநலம் பாதிக்கப் படுதல்.

இ. ஒவ்வாத மருந்து மாத்திரைகளை உட்கொள்ளுதல்.

ஈ. உடலில்கரியமிலவாயு மிகுதல்.

உ. நஞ்சு.

ஊ. நச்சுத் தன்மை உடலில் பரவுதல்.

எ. சிறுநீரக இயக்கமின்மையால் கழிவுப்பொருள் உடலில் தேங்குதல்.

ஏ. வெப்பம் மிகுதல்.

–இவ்வாறான காரணங்களாலும் உட்புறத்தலைவலிகள் உண்டாகும்.

***எதனால் இது வருகிறது?***

இதுவரை படித்த இந்த விவரங்களே உங்களுக்குத் தலைசுற்றலை உண்டாக்கி விட்டதா என்ன? இன்னும் விஷயம் இருக்கிறது. வேண்டுமானால் ஒருமுறை பெருமூச்சு விட்டுக்கொண்டு நிதானமாக இதுவரை சொல்லப்பட்டதை இன்னும் சற்று விரிவாக அறிய மேலே படியுங்கள்:

மண்டையோட்டின் மேற்பரப்பில் தலையைச் சுற்றியுற்ற இரத்த நாளங்களும், தலையின் உட்புறமுள்ள இரத்த நாளங்களும் சுருங்கி விரிவடைவதால் ஏற்படுவதுதான் ஒற்றைத் தலைவலியாகும். இரத்த நாளம் சுருங்கும்போது, பாதிக்கப்பட்ட நபருக்கு மூளையில் எந்தப் பகுதி பாதிக்கப்படுகிறதோ, அதற்கு ஏற்றபடி அதன் வெளிப்பாடுகளும் அமையும்.

உதாரணமாகச் சிலருக்குக் கண்களின் முன்னால் ஒளிக்கற்றைகள்தோன்றி மறைவது போலிருக்கும். சிலருக்குப் பக்கவாதமே ஏற்பட்டு நீங்கும். வாந்தி - மயக்கம் சிலருக்கு வரும்.

இரத்த நாளங்கள் விரிவடைகிற போது ஒருவகைத்-தலைவலிஉண்டாகும். அப்படிப்பட்ட தலைவலிக்கு, அந்த நாளங்களைச் சுருங்கச் செய்யும் Engotamine கலந்த மாத்திரைகளைக் கொடுத்தால் போதும்; வலி குறைந்து விடும். திரும்பத் திரும்ப இவ்வகைத் தலைவலி உண்டாகக்கூடும்.

அவ்வகைப் பாதிப்பிற்கு ஆளாவோர் மருத்துவரிடம் காட்டி, அவர்கள் குறிப்பிடும் மாத்திரை மருந்துகளைச் சாப்பிட வேண்டும்; தலைவலி நீங்கி விடும் இதற்கு ஏராளமான மருந்து மாத்திரைகள் உண்டு என்றாலும், இஷ்டப்படி எதையாவது வாங்கித்தின்னக்கூடாது.

ஒற்றைத் தலைவலி பெண்களைவிட ஆண்களுக்கு அதிகமாக வரும். தூங்கிய 2 அல்லது 3 மணிநேரம் கழித்து கண்களில் வலி வரும். பொறுக்க முடியாத வலியும் கண்ணீர் சுரப்பு, அடைத்த நாசி, மற்றும் மூக்கிலிருந்து நீர் வழிதல், கண்ணிமைகள்வீக்கம்போன்றவை இந்நோயின் மற்ற வெளிப்பாடுகள் ஆகும். இது குறைந்தது ஒரு மணியிலிருந்து இரண்டு மணிநேரம் வரை இருக்கும். இதுதினமும் - பெரிதும் இரவில் வரும். வாரக்கணக்கில் நீடிக்கும். பிறகு வலியில்லாக் காலம் மாதக்கணக்கில் இருக்கும்; ஆண்டுக்கணக்கிலும் நீடிக்கும்.

'மைக்ரெய்ன்' வகையைச் சேராத ஆனால் இரத்த நாளங்களில் தலையில் அடிபடுவதால்



> **நண்பனைத் தேர்ந்தெடுப்பதில் நிதானமாக இரு; அவனை மாற்றுவதில் இன்னும் நிதான மாக இரு.**
>
> **– ஸ்காட்டிஷ் பழமொழி**

ஏற்படும் மாற்றங்களினால் ஒற்றைத் தலைவலி அல்லாத தலைவலிகள் ஏற்படும். இரத்தக் கொதிப்பினால் பாதிக்கப் படுவோரில் பத்து சதவிகிதம் பேருக்கு விடியற்காலையில் இவ்வகைத் தலைவலி ஏற் படும். அது மாதிரி நேரங்களில் அவர்களின் இரத்த அழுத்தத் தைப் பரிசோதித்தால் இரத்த அழுத்தம் ஏறியிருப்பதை உணரலாம்.

இரத்த நாளத்தில் வரும் ரணத்தால் வருகிற தலைவலி யானது வயது முதிர்ந்தோர்க்கு வரும் ஒருவகை தலைவலி. இது Temporal Artery எனப்படும். இரத்தநாளம்ஒருவகைபாதிப்புக்கு உள்ளாவதால் ஏற்படுகிறது. இந்த நோயினால் பாதிக்கப் பட்ட நபருக்குக் காய்ச்சல், முகம் மற்றும் தாடையில் வலி, கழுத்து மற்றும் பிடரியில் வலி போன்றவை தோன்றும். பாதிப்புக்கு ஆளான இரத்த நாளத்தைத் தொட்டாலே வலி உண்டாகும்.

இந்த நோயால் பாதிக்கப் பட்ட பகுதியில் சிறிது சதை எடுத்துப் பரிசோதித்து (Biopsy) அதை உறுதி செய்ய வேண்டும். இதற்கு நாளமில்லா சுரப்பி நீர் அதிகரிக்கத்தக்கமருந்துகள்உடனே கொடுக்கப்பட வேண்டும். அப்படி கொடுக்காவிட்டால் கண்ணுக் குள் செல்லும் இரத்த நாளங்கள் பாதிப்பிற்கு ஆளாகும். பிறகு பார்வைக் கோளாறு ஏற்படும்.

சிலருக்கு மனத்தளர்ச்சி மற்றும் பதட்டத்தின் காரண மாகத் தலையைச் சுற்றியுள்ள தசைகள் இறுகி, தலையை ஏதோ ஒரு பட்டையைக் கொண்டு அழுத்திக் கட்டி விட்டாற்போல ஒரு இறுக்கமான வலி இருக்கும். இது ஒருவகைத் தலைவலி (Muscle Contractions).

முகக் காற்றுத் துவாரங் களினால் வரும் தலைவலி என்று சொன்னது (Sinus Headache) என்ன தெரியுமா?

நம்முடைய தலையின் எடையை நாம் உணராமல் இருப்பதற்குக் காரணம் நம் முடைய தலையைச்சுற்றி, குறிப் பாக மூக்கைச் சுற்றி 'சைனஸ்' என்று ஒரு காற்றுப்பை அமைப்பு உள்ளது. அவற்றில் எப்போதும் காற்று இருக்கும்.

இது மூக்குடன் தொடர் புடையது. மூக்கில் சளி பிடிப்ப தால் அல்லது மூக்கின் மத்தியில் உள்ள தண்டு வளைந்து இருந் தால் 'சைனஸ்' பாதையில் அடைப்பு ஏற்பட்டு, அதிலுள்ள காற்று உறிஞ்சப்பட்டு 'வெற்றிடத் தலைவலி' உண்டாகும். சில சமயங்களில் சைனஸ்களின் கீழ் உண்டாகும். இதனால் ஏற்படும் தலைவலி தலையின் முன்பாகத தில் இருக்கும். இதற்குக் காது மூக்கு தொண்டை நிபுணர்தான் சரியான சிகிச்சை அளிக்க முடியும்.

கண்களில் ஏற்படும் நோய் காரணமாக வரும் தலைவலியை (Ocular headache) என்று கூறு வார்கள். அது பின்வரும் நோய்களினால் வரும்:

1. Refractive eerors எனப்படும் பார்வைக்கோளாறு
2. கண்களைச் சுற்றியுள்ள தசை களின் சீரான சுருங்கும் தன்மை பாதிக்கப் படுவதனால் உண்டாகும்.
3. Glaucoma நோய் கண்டால் கண்களில் உண்டாகும். திரவம் வெளியேறும். வழியில் அடைப்பு ஏற்படுவதால் அழுத் தம் அதிகமாகி தலைவலி ஏற்படுகிறது.

காதுகளுக்கு அருகே செல் லும் உணர்ச்சி நரம்புகள் அடி பட்டாலோ அல்லது கட்டியி னாலோ அல்லது ரணமாவ தாலோ பாதிக்கப்படும்போது தலைவலி உண்டாகும்.

அதுபோலப் பற்களில் ஏற் படும் சொத்தையினால் தாடை எலும்புகளில் சீழ்பிடித்துத் வலியும் வீக்கமும் உண்டாகும்.

தலையில் இருக்கும் முக்கிய நரம்புகளை 'அக்கி' என்ற கொப்புளங்கள் பாதித்தால் ஏற்படும் நோயை Post Herpetic Neuralgia என்பார்கள். சில சமயங்களில் பொறுக்க முடியாத அளவுக்கு இருக்கும் இந்த வலி அந்த நரம்புகள் எங்கெல்லாம் பரவி இருக்கிறதோ அந்த இடங்களில் மட்டுமே இருக்கும்.

'Cronical spondylosis Headache' என்ற தலைவலி தற்போது அதிகமாகக் காணப்படுகிறது. கழுத்து, எலும்புகளில் ஏற்படும் தேய்மானத்தின் காரணமாக வருவது இது.

Degenerative Changes என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். நாம் தற்போது இரு சக்கர வாகனங்

> **வல்லமை முழுவதும் உன் உள்ளத்தில் அடங்கியுள்ளது. எதையும் உன்னால் செய்ய முடியும்.**
>
> **– சுவாமி விவேகானந்தர்**

களை அதிகம் பயன்படுத்துவத னாலும் கனமான தலையணை யில் படுப்பதாலும் இவ்வகைத் தலைவலி வருகிறது. இந்த வலி பின்னந் தலையான பிடரிக்கும் தோள்பட்டைக்கும் பரவும்.

இதுவரை நாம் தலைக்கு வெளியே உள்ள திசுக்களில் ஏற்படும் நோய்களின் காரண மாக வரும் தலைவலிகளைப் பார்த்தோம். இனி, தலைக்கு உள்ளே ஏற்படும் நோயினால் வரும்தலைவலியைப்பார்ப்போம்.

தலைக்குள்ளே ஏற்படும் நோய்கள் அரிதானாலும் அவை உயிருக்கே ஆபத்தை விளை விக்கக் கூடியவையாகும். தலைக்குள்ளே உண்டாகும் கட்டி (Brain Tumour) வளரும போது அது மண்டையோட்டுக் குள்ளே தான் வளரவேண்டும். ஏனென்றால் மண்டையோடு விரியக்கூடியது அல்ல. எனவே, தலைக்குள் அழுத்தம் கூடி, மூளையை அழுத்தி, நரம்பு மண்டலங்களைப் பாதித்து பின்னர் உயிருக்கே அது உலை வைத்துவிடும்.

இதுபோலவே, மூளையில் ஏற்படும் (Brain Abscess) மூளைக் கட்டி, மூளையில் உண்டாகும் டி.பி. கட்டி (Tuber culoma) ஆகியவற்றாலும் தலைவலி உண்டாகும். (Tape worm) என்ற ஒருவகை நாடாப்புழு மூளை யைத்தாக்குவதால்கூட கொடிய தலைவலி ஏற்படும்.

**பெருமையை மூன்று அறி குறிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம்; தோற்றத்தில் எளிமை; செயலில் மனிதத் தன்மை; வெற்றியில் வெறியின்மை.**

**– பிஸ்மார்க்**

## அறிவுப் புரட்சி

பெரியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அறிவுப் புரட்சி சுலபத்தில் நிற்கப் போவதில்லை. அது போக வேண்டிய தூரத்திற்குப் போய் அடைய வேண்டிய சக்தியை இலக்கைத் தொட்டுத்தான் நிற்கும். எப்படி வில்லை விட்டு கிளம்பிய கணை, பாய வேண்டிய இடத்தில் பாய்ந்தால்தான் அதன் வேகம் நிற்குமோ அதைப் போல பெரியார் இடத்திலிருந்து பிறந்த அறிவுக்கணை எந்த இலட்சியத்தை அடைய வேண்டுமோ அதை அடைந்தே தீரும்; இதில் ஐயம் யாருக்கும் இல்லை.

**– அறிஞர் அண்ணா**

மூளையைச் சுற்றி ஜவ்வு போன்ற ஒருவகைத் திரை உள்ளது. இது டி.பி. கிருமி, சீழ்க் கிருமி போன்ற கிருமிகளினால் பாதிக்கப்பட்டால் ஏற்படும் நோயை மெனின்ஜடிஸ்' (Menin-gitis) என்கிறோம். இதனாலும் தலைவலி ஏற்படும். காய்ச்சல் போன்றவையும் இருக்கும்.

இரத்தக் குழாய்களில் ஏற் படும் வெடிப்பு, இரத்தக்குழாய் அடைப்பு போன்ற நோய்களும் தலைவலியை உண்டாக்கும். இதைத்தான் Stroke என்கிறோம். இது உணர் இரத்த அழுத்தம், இரத்தக் குழாய்கள் பிறவிக் கோளாறு காரணமாக வெடித்தல், மற்றும் சர்க்கரை நோய் காரண மாக ஏற்படுவது ஆகும்.

இவ்வகைத் தலைவலிகள் பெரும்பாலும் தாங்கமுடியாது இருக்கும். பாதிக்கப்பட்ட நபரால் தூங்க இயலாது. தலைக்குள் சுத்தியை வைத்து அடிப்பது போல இருக்கும்.

தலையில் எந்த இடத்திலும் வலி வரலாம். இவர்களுக்குத் தலைவலியுடன் வாந்தி முதலிய வையும் இருக்கும். மிகவும் பதட்டத்தோடும் இருப்பார்கள். நரம்பு மண்டலங்கள் பாதிக்கப் படும். ஆனால் உடம்பில் ஏதே னும் ஒரு பகுதி செயலிழந்து போகலாம்.

உதாரணத்திற்கு – கண் நரம்பு பாதிக்கப்பட்டால் கண் பார்வையே இல்லாது போய் விடும்.

இப்படிப்பட்ட நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்குத் தகுந்த சிகிச்சை உடனடியாக அளிக்கப்படவேண்டும். தவறி னால் இவர்களை நாம் இழக்க வும் நேரிடலாம்.

இப்பொழுது கணிப்பொறி தொகுப்பு உருவப்படம் (C.T. Scan) காந்தக் கதிர்வீச்சு நிழற்படம் (M.R.I) போன்ற நவீன பரி சோதனை முறைகள் உதவியால் இவ்வகை நோயினால் பாதிக்கப் பட்ட நபர்களின் நோயை எளிதில் கண்டுபிடித்து விட முடியும். ஆனால் இந்தச் சோதனைகளுக்கு மிகவும் பணச்செலவு ஆகும் தான்; செலவைப் பார்த்தால் நலத்தைக் காக்க முடியுமா!

நரம்பியல் அறுவை சிகிச்சை (Neuro surgery) முறை இப்போதெல்லாம் மிகவும் வளர்ந்துள்ளது.

'தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தானே தெரியும்' என்பார்கள். அப்படி வருகிற எம்மாதிரியான உடல் பாதிப்பா னாலும் சரி; ஆரம்பத்திலேயே கண் மருத்துவம் செய்து கொண் டால் நலம் பெற்றுவிட முடியும்.

சுற்றுச்சூழல் மேம்பாடு:

# பாதுகாப்போம் பவளப்பாறைகளை!

விதவிதமான வண்ணங்களில் வெவ்வேறு வடிவங்களில் கடல் மட்டத்திற்குச் சற்றுக்கீழே இருக்கும் பவளப்பாறைகள் இயற்கையான பொக்கிஷம்.

இந்தியாவில் மன்னார் வளைகுடா, அந்தமான் - நிகோபார் தீவுகள், லட்சத்தீவுகள் என்று பல இடங்களில் பவளப்பாறைகள் இருக்கின்றன. தென்னிந்தியாவில் ராமேஸ்வரத்திலிருந்து தூத்துக்குடி வரையிலான 140 கி.மீ தூரக் கடற்பரப்பில் இருக்கிற தீவையொட்டி பவளப்பாறைகள் அதிகம்.

தூத்துக்குடி அருகே பவளப்பாறைகள் அடர்ந்திருந்தாலும் இவை கவனத்துக்கு வந்தது 1916க்குப் பிறகுதான்! இருந்தாலும் இவை குறித்து 79 ஏப்ரலிலிருந்து 80 மார்ச் மாதம் வரை ஆய்வு நடத்தியிருக்கிறது தூத்துக்குடியிலுள்ள மீன்வளக் கல்லூரி. இதன் பிறகே இதனுடைய முக்கியத்துவம் தெரிய வந்திருக்கிறது.

ஆனால் அதற்கு முன்பே தூத்துக்குடி கடற்கரையிலிருந்து ஆறிலிருந்து 150 கி.மீ வரை தூரமுள்ள வான் தீவு, கார்வார் தீவு, விலங்கு சல்லித் தீவு, கரை சல்லித் தீவு பகுதியிலுள்ளவர்கள் அதை வியாபார மாக்கியிருக்கிறார்கள். இதை வைத்தே 400 பேருக்கும் மேல் தினசரி வாழ்க்கை நடத்துமளவுக்குப் பாறைகளை வெட்டியெடுப்பது நடந்திருக்கிறது. வெட்டியெடுக்கப்பட்ட சல்லிகள் படகுகள் மூலம் கரைக்குக் கொண்டுவரப்பட்டு, நேரே காளவாசலுக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு கரியுடன் சேர்த்து இதை எரித்தால் சல்லிகள் பவுடராகிவிடும். சிமிண்ட் காகிதம் மற்றும் சர்க்கரை ஆலைகளின் உபயோகத்திற்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தது இந்தப் பவுடர். இப்படி ஒரு வருஷத்தில் பவளப்பாறையிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட சல்லிகள் மட்டுமே 15 ஆயிரம்டன். அதாவது ஒருபுறம் பவளப் பாறைகளின் அருமை உணரப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், மற்றொரு புறம் அதைத் தொழில் ரீதியாக அழிப்பதும் நடந்து கொண்டிருந்தது.


80க்குப் பிறகு அரசே இதைக் கவனத்தில் கொண்டு 81ல் மீன்வளத்துறையில் பவளப் பாறை பாதுகாப்புக்காகவே ராமேஸ்வரத்திலிருந்து தூத்துக்குடி வரை பதினெட்டுப் பேர் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது. இவர்களுக்குப் படகு வசதி செய்து தரப்பட்டது. அதற்குப்பிறகு பவளப்பாறைகளை வெட்டிக் கொண்டுவருகிறவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. தூத்துக்குடிக் கடலோரத்திலுள்ள கிராமமான வெள்ளப்பட்டியின் முக்கியத் தொழிலே பவளப்பாறைகளை உடைப்பதாக இருந்த நிலை இப்போதுமாறியிருக்கிறது. இருந்தும் சிலாவத்துறை, தருவைக்குளம் பகுதிகளில் இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது பவளப்பாறை உடைப்பு.

***இதற்கிடையில் பவளப்பாறைகளைப் பற்றி கொஞ்சம் விஷயங்கள்:*** திட்டுத்திட்டாகக் கடல் மட்டத்திற்கு ஏறத்தாழ பத்தடிக்குக் கீழிருந்து பவளப்பாறைகள் தென்பட ஆரம்பிக்கின்றன. பவளப்பாறைகளில் மேற்புறம் விரல்கள் மாதிரியானஅமைப்புடன்பலவண்ணங்களில்இருக்கும் விரல் செல்கள் கால்சியத்தை உள்ளடக்கியவை. விரல் செல்களிலேயே பல வகைகள் இருக்கின்றன. சில மூளை மாதிரியான அமைப்புடனிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரை நீலம், கிரே, வெள்ளை, பிங்க் நிறங்களில்

பாறைகளிருக்கின்றன. இது ஒருவகையான உயிரினம் என்று சொல்லப்படுகிறது. என்றாலும் இதை வைத்துப் பல கடல்வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன.

பவளப்பாறைகள் உருவாகவே தனியான, இளஞ்சூடு கலந்த தட்பவெப்ப நிலை ஏறத்தாழ 20 டிகிரி சென்டிகிரேடு வெப்பம் தேவைப் படுகிறது. இதனாலேயே சில அபூர்வக்கடல் வாழ் உயிரினங்கள் பவளப்பாறை இருக்கும் பகுதியில்வந்து முட்டையிடுகின்றன. பாறைகள் மீது படர்ந்திருக்கும் பாசி, விரல் சல்லிகளை உணவாகக் கொண்டு சில குறிப்பிட்ட மீன்கள், நண்டுகள், புழுக்கள் வாழ்கின்றன. பவளப் பாறைகளின் வளர்ச்சி வருடத்திற்கு இரண்டி லிருந்து ஐந்து செ.மீ. வரை. 20க்கும் அதிகமாக இருக்கிற பவளப்பாறைகளின் வகைகளில் சிலவற்றில் இன்னும் மிதமான வளர்ச்சி.

இயற்கையான சுற்றுச்சூழலுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கிற பவளப்பாறைகளின் முக்கியத்துவம் எண்பதுகளுக்குப் பிறகு பல உலக நாடுகளில் தெரிய வந்திருக்கிறது. 80ல் சர்வதேச இயற்கை வனப்பாதுகாப்புச் சங்கம் பவளப்பாறைகளை இயற்கை வளத்திற்கும் உயிர் வாழ்வதற்கும் ஆதாரமான ஒன்றாகக் கூறியிருக்கிறது. இதற்காக சர்வதேச அளவில் மாநாடுகள் நடத்தப்பட்டிருக்கின்றன.



பவளப்பாறைகளைவணிக ரீதியாகப் பயன் படுத்திக் கொண்டிருந்த இலங்கை, மாலத்தீவு, இந்தோனேசியா, இந்தியா, பிலிப்பைன்ஸ் உட்படபலநாடுகளுக்குஅதன் அபூர்வத்தன்மை உணர்த்தப்பட்டிருக்கிறது. அதன் பிறகு பிலிப் பைன்ஸ் நாட்டில் பவளப்பாறைகளைச் சேகரிப்பதும், அதை ஏற்றுமதி செய்வதும் தடை செய்யப்பட்டிருக்கிறது. அமெரிக்காவும் பவளப்பாறைகளுக்கெனச் சில கட்டுப்பாடு களை விதித்திருக்கிறது.

தமிழ்நாட்டில் தூத்துக்குடி பகுதியில் தான் பவளப்பாறைகளை வணிகத் தேவைகளுக்காகப் பயன்படுத்துவது இன்னும் நடக்கிறது. 80க்குப் பிறகு பவளப்பாறைகளை உடைப்பது தடைசெய்யப்பட்டாலும் நிலைமை தொடர்கிறது. இதனால் பவளப்பாறைகள் நிரம்பிய தூத்துக்குடியிலிருந்து 15 கி.மீ தூரத்திலுள்ள 16 ஹெக்டேர் பரப்பளவிலான சரைசல்லித் தீவில் ஒரு பகுதியே அழிக்கப்பட்டுவிட்டது. 91க்குப் பிறகு பவளப்பாறைகள்வனஇலாகாகட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு, பவளப்பாறைகள் அதிகமுள்ள தீவுகளில் வேம்பு, பூவரசு போன்ற மரங்கள் நடப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் தூத்துக்குடி கலெக்டராக சாயிக்குமார் இருந்த போது பவளப்பாறை சல்லிகளை எரிக்க உதவிக் கொண்டிருந்த 28 காளவாசல்கள் ஒரே நாளில் தகர்க்கப்பட்டன. முன்பு வெடி மருந்துகள் உபயோகப்படுத்தப்பட்டு அதை வைத்து பவளப்பாறைகள் தகர்க்கப்பட்டதெல்லாம் இப்போது நிறுத்தப்பட்டிருந்தாலும் முழுக்கக் குறைந்து விடவில்லை.

தூத்துக்குடி கிரேஸபுரத்தையடுத்துள்ள கடற்கரையில் நாம் போனபோது பவளப் பாறைச் சல்லிகள் குவிக்கப்பட்டிருந்ததைப் பார்க்க முடிந்தது. கடல் மட்டத்திற்குக் கீழே கடப்பாரையுடன் போய் பாறைகளை உடைத்து வள்ளத்தின்மூலமாக கரைசேர்க்கப்பட்டிருக்கிற சல்லிகள் இவை. கஷ்டப்பட்டு இவற்றைக் கரை சேர்க்கிற தொழிலாளர்கள் சம்பாதிப்பதைவிட இத்தொழிலில் இருக்கும் ஏஜெண்டுகள் சம்பாதிப்பதே அதிகம்.



தூத்துக்குடியிலுள்ள வ.உ.சி. கல்லூரியில் நிலத்தியல் துறையைச் சேர்ந்த பேராசிரியரான டாக்டர் ஏ. பாலசுப்பிரமணியம் பவளப்பாறைகள் குறித்து ஆய்வு பண்ணியிருப்பவர். ஆஸ்திரேலி யாவில் பவளப்பாறைகளுக்கு எப்படிப்பட்ட முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது என்பதை நேரடியாக உணர்ந்தவர். அவர் நம்மிடம் சொன்னார்: குறிப்பிட்ட சில நாடுகளில் கடல் பரப்பிலிருக்கின்ற அபூர்வ இனம் பவளப்பாறை கள். பல ஆயிரக்கணக்கான உறுப்புகள் இணைந்தவையே இந்தப் பவளப்பாறைகள். இந்தியாவில் அரேபிய கடற்பரப்பில் சில பவளப்பாறைகள் இருந்தாலும் கிழக்குக் கடற்கரைபரப்பில் இங்குள்ளவை மட்டுந்தான். இவை உருவாக ஆயிரக்கணக்கான வருஷங்களா கின்றன. இதைத் திரும்பவும் உருவாக்க முடியாது.

ஆஸ்திரேலியாவுக்கு நான் போயிருந்த போது அங்கு பவளப்பாறைகளுக்கு அவர்கள் கொடுக்கும் மதிப்பு தெரிந்தது. ஆஸ்திரேலி யாவில் கடற்கரைப் பகுதியிலுள்ள Townsville என்கிற இடத்தில் உள்ள பவளப்பாறைகளைச் சுற்றுலாத்தலமாக ஆக்கியிருக்கிறார்கள். கீழே பவளப்பாறைகள் மேலே கண்ணாடியிலான நீண்ட பாதை, பாறைகளின் இயற்கை அழகை வெகு அருகில் கடலுக்குள் இறங்கிப் பார்ப்பதைப் போன்ற உணர்வுடன் பார்க்கலாம். சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்கிறது அந்த இடம். மீன் பிடிப்பது அந்தப்பகுதியில் தடை செய்யப்பட்டிருக்கிறது. இயற்கையாக உருவான பவளப்பாறைகளை இவ்வளவு அருமையாக பாதுகாக்கிறார்கள். இந்தப் பவளப்பாறைகள் வெறும் கால்சியமாக, படிகமாக, வணிகத் தேவைகளுக்கான ஒன்றாக மட்டும் பார்க்கிறோம். அதன் இயற்கை இயல்பை உணரவில்லை. இந்தப் பகுதியில் உடைக்கப்பட்டிருக்கின்ற பவளப்பாறைகள் திரும்பவும் பழைய வடிவத்திற்கு வர எத்தனை ஆண்டுகள் ஆகும்? பாருங்கள்...

எண்பதுக்குப் பிறகு இந்தப் பகுதியிலுள்ள பவளப்பாறைகளை வைத்து தேசிய கடற் பூங்காவை அமைக்கும் திட்டமிருந்தது. பிறகு ஏனோ இந்தத் திட்டம் தள்ளிப் போடப் பட்டிருக்கிறது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பாறைகள் தகர்க்கப்படுவது முழுக்க நிறுத்தப்பட்டு இப்பகுதியில் தேசியக் கடற் பூங்காவை அமைக்க வேண்டும். இதன் மூலம் இயற்கையான சுற்றுலாத்தலமும் உருவாகும். அபூர்வ பவளப்பாறைகளும் பாதுகாக்கப்படும் என்று சட்ட ரீதியில் இப்பிரச்சினையை அணுகியிருக்கிறது பகவதி சுற்றுச்சூழல் வளர்ச்சி நிறுவனம்.

பவளப்பாறைகள் ஒரு அபூர்வ இனம்தான். ஆனால் இதை மதித்துக் காப்பாற்றுவது, இயற்கை வளத்தைக் காக்க சில நடவடிக்கை களை எடுப்பது இதெல்லாம் கூட இங்கு இயல் பாக நடக்குமா? இல்லை அதுவும் அபூர்வந்தானா?

திரு.எஸ்.டி. மணா (லட்சுமணன்) அவர்களின் ''தமிழக சுற்றுச்சூழல் பிரச்சனைகள்'' என்ற நூலிலிருந்து.
நன்றி : பகவதி சுற்றுச் சூழல் வளர்ச்சி நிறுவனம், அமைதி அறக்கட்டளை, திருச்சி சாலை, திண்டுக்கல் - 624 009.

## அண்ணாவின் நகைச்சுவை

திருத்தணி சுப்பிரமணியர் கோயிலில் ஆடிக் கிருத்திகை சமயத்தில் பெரிய திருவிழா நடைபெறும். மக்கள் ஏராளமாக வருவார்கள். அதற்கு முன்னதாக அங்கு அமைந்து வரும் குடிநீர்த் திட்டத்தை முதலமைச்சர் வந்து துவக்கி வைப்பாரா? தேதி கொடுப்பாரா? என்று திருத்தணித் தொகுதி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் வினாயகம் கேட்டார்.

''தம்பியின் (முருகன்) கோயிலுக்கு அண்ணன் (வினாயகம்) இவ்வளவு அக்கறை காட்டுவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதும் சட்டமன்றம் பெருஞ் சிரிப்பில் ஆழ்ந்தது.



# புயல்

**- அகிலன் -**

இளமைத் திமிரும் வயதில் முறுக்கும் கொண்ட ஆயிரம் ஆயிரம் பெண்களுக்குத் திடீரென்று ஒரே சமயத்தில் பேய் பிடித்துக் கொண்டு தலைசுற்றி ஆடத்தொடங்கினால் எப்படி இருக்கும்? பயங்கரமான ஒரு மந்திரவாதியின் இரக்க மற்ற சவுக்கடி தாங்காது அவர்கள் ரத்தம் கக்கி அலறினால் எப்படி இருக்கும் - உண்மையிலேயே இயற்கைப் பெண்ணுக்குப் பேய்விடித்துவிட்டதா? கடவுள் என்னும் மந்திரவாதி அவளுடைய வெறி கண்டு சீற்றம்கொண்டு அவளை இப்படி அலறித்துடிக்க வைக்கிறானோ?

கடலோரமாக இருந்த அந்தக் கிராமம் புயலால் மதயானையின் கையிலகப்பட்ட மலர் மாலையாகிக் கொண்டிருந்தது. பெரிய பெரிய மரங்களெல்லாம் பம்பரம் போல் சுழன்று பூமியின் நெஞ்சுக்குள் ஓடியிருந்த ஆணிவேர் களைப் பிய்த்துக்கொண்டு விழுந்தன. கடல் அலைகள் திமிங்கிலங்களாக வாயைப் பிளந்து கரையோரத்தில் நின்ற குடிசைகளை விழுங்கின. பேய்க்காற்றில் அகப்பட்டு வீட்டுக்கூரைகளான தென்னங்கீற்றுகளும், தகரத் தகடுகளும், சீமை ஓடுகளும், பட்டபாடு....

ஊருக்கு மத்தியில் ஒய்யாரமாக நின்ற ஒரு மாடி வீட்டுக்குள்ளிருந்து சன்னல் வழியாக மூன்றுபேர் இந்தக் காட்சியை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பெரிய மனிதர் ஒருவர், அவர் மனைவி, பையன். அந்தப் பெரிய மனிதர் சென்னையில் குதிரைப் பந்தயம் பார்ப் பதற்காக வாங்கிய தூரதிருஷ்டிக் கண்ணாடியால் கடலின் கொந்தளிப்பைக் கவனித்துக் கொண்டி ருந்தார். அவர் மனைவி தான் உடுத்தியிருந்த கொள்ளேகாலம் பட்டுப்புடவையால் உடம்பை இழுத்துப் போர்த்திக்கொண்டு பயத்தால் சுருண்டுகொள்ளும் முள்ளம்பன்றி போல நாற்காலியில் முடங்கிக் கிடந்தாள். பையன் திறந்த கண்ணை இமைக்காமல் சன்னலுக்கு வெளியே நிலைகுத்திய பார்வையில் இருந்தான்.

பையனின் மனம் அவனிடம் இல்லை. எதிரே குமுறிக்கொண்டிருந்த கிராமப் பகுதியை யும், கடலையும் கார்மேகத்தையும், அடிவானத் தையும் அளந்துவிட்டு அதற்கப் பாலும் தாண்டிச் சென்றது. அடிக்கடி தன் கண்களில் தேங்கும் கண்ணீரை யாரும் அறியாதபடி துடைத்துக் கொண்டான். அவனுக்கு எதிரிலேயே நூற்றுக் கணக்கான குடிசைகள் இருந்த இடம் தெரியாமல் கடல் அலைகளால் பிய்த்துப் பிய்த்துச் சின்னா பின்னப் படுத்தப்பட்டன.

'பெரிய பட்டாளமே திரண்டு வர்ராபோலத் தெரியுது. எல்லாக்கூட்டமும் ஊருக்குள்ளேதான் ஓடிவருது' - என்றார் பெரியவர்.

கண்ணாடி வழியே கவனித்துக் கொண்டிருந்த அவரைத் திரும்பிப் பார்த்தாள் மனைவி. அவள் ஒன்றும் பேசவில்லை.

''ஊருக்குள்ளே ஓடி வராமல் கடலுக் குள்ளேயா போய் விழுவாங்க?'' என்றான் பையன்.

''ஒண்ணா ரெண்டா, ஆயிரம்பேர் வந்தா அத்தனைப் பேருக்கும் இடத்துக்கு எங்கே போறது?''

''மனமிருந்தால் இடமிருக்கும்''



தகப்பனுக்கும் பிள்ளைக்கும் இந்த மாதிரிப் பேச்சு ஆரம்பமாவதைப் பிடிக்காதவள் போல் தாயார் குறுக்கிட்டாள். ''ஊர் வம்பு நமக் கெதுக்கு? அடுப்பிலே சூடா உருளைக் கிழங்கு வறுவல் போடச் சொல்லியிருக்கேன்; ஒரு நிமிஷத்தில் வந்திடும். பேசாமல் சாப்பிட்டுச் சும்மா இருந்தால் போதும்.''

'ஊர்வம்பு'க்கு இவர்கள் போகாவிட்டாலும் ஊர்வம்பு இவர்களைத் தேடிக் கொண்டு வந்தது. கரையோரமாகக் குடியிருந்தவர்கள் அடித்துப் புடைத்துக்கொண்டு குழந்தை குட்டிகளுடன் ஊருக்குள் நுழையத் தலைப்பட்டார்கள். மாடி வீடுகள் அதிகமாயிருந்த இவர்களுடைய தெருவில் அந்தக் கூட்டம்புகுந்து நாலுபுறமும் சிதறிப் போய் ஒண்டிக் கொண்டது. இவர்களுடைய வீட்டு முகப்பிலும் சிலர் கூடினார்கள்.

**...பையன் அவசர அவசரமாகக் கீழே இறங்கிப் போனான். ''எங்கேடா போகிறாய்?'' என்ற அவன் தாயாரின் கேள்வியை அவன் காதில் போட்டுக்கொள்ளவில்லை...**

பையன் அவசர அவசரமாகக் கீழே இறங்கிப் போனான். ''எங்கேடா போகிறாய்?'' என்ற அவன் தாயாரின் கேள்வியை அவன் காதில் போட்டுக்கொள்ளவில்லை. கீழே இறங்கிச் சென்று வெளிவராந்தாவில் கூடியிருந்தவர்களை ஹாலுக்குள் நின்றபடியே சன்னல் வழியாகப் பார்த்தான். நேற்றுப் பிறந்த பச்சைக் குழந்தைகள் முதல், நாளைக்குச் சாகப் போகிற தொண்டுக்கிழங்கள் வரை அங்கே வந்திருந்தன. ஒரு உடம்பாவது நனையாமல் இல்லை; ஒரு உடம்பாவது நடுங்காமல் இல்லை; குளிர் தாங்க முடியாமல் வெறும் கைகளை மடக்கித் தங்கள் நெஞ்சுகளை



மறைத்துக் கொண்டிருந்தார்கள் ஆண்கள். பெண்களின் தேகத்தைத் துணி என்ற பெயருள்ள கந்தல்கள் மூடி மறைப்பதற்கு முயன்று கொண்டிருந்தன. வெளிவராந்தாவில் இடம் நிறைந்ததால் வெளியே தரையில் பலர் தூண்களைப் பற்றிக் கொண்டு நின்றனர்.

பையன் கீழே இறங்கிய அதே வேகத்தில் திரும்பவும் மேலே வந்தான்.

''அப்பா!''

அப்பா அப்போதுதான் வெளியே அதிக அக்கறையுடன் பார்க்கலானார். பையன் அழைப்பதன் காரணத்தை அவர் ஊகித்துக் கொண்டதால் அவருக்கு அவன் பேச்சைக் கேட்பதில் இஷ்டம் இல்லை.

''அப்பா''

அப்பா திரும்பி மூக்குக் கண்ணாடி வழியே நெற்றியைச் சுருக்கிக் கொண்டு பிள்ளையைப் பார்த்தார்.

''வராந்தாவில் நிற்க இடமில்லை. பாதிப் பேர் நடுத்தெருவில் மழையில் நனைகிறார் களப்பா! காற்று அவர்களை அடித்துக்கொண்டு போய்விடும் போலிருக்கிறது!''

''அதற்காக?''

''கொஞ்சம் நேரத்துக்கு வெளிக் கதவைத் திறந்து உள்ளேவிட்டால் அவர்களுக்குச் சௌகரியமாக இருக்கும். ஹாலில்தான் நிறைய இடம் இருக்கிறதே!''

தகப்பனார் கேலியாகச் சிரித்தார். தம்முடைய மனைவியைப் பார்த்து, ''பிள்ளை யாண்டானுடைய யோசனையைக் கேட்டியா? ஹால் மாத்திரம் வேண்டாம்; வீட்டையே அவுங்களுக்கு ஒழிச்சுக் கொடுத்திட்டு நம்ம நடுத்தெருவுக்கு போகலாமே?''

''ஹால் சும்மாதானே அப்பா இருக்கிறது? நமக்கு இப்போது உபயோகமில்லாத இடத்தை நாலு நாழி அவர்களிடம் விட்டால் என்ன?''

''நீ சும்மா இருடா குழந்தை! உனக்கு ஒன்னுந் தெரியாது; நீ சிறுபிள்ளை'' என்று தாயார் குறுக்கிட்டாள். பின்பு பையனின் முகம் வருத்தத்தால் சுருங்குவதைக் கண்டவுடன் அவளுக்கு அவனிடம் ஏதாவது சொல்ல வேண்டும் போலிருந்தது.

''உனக்கு அவர்களோட குணந்தெரியாது. அத்தனையும் திருட்டுக் கழுதைகள்! ஹாலுக் குள்ளே அவர்களை விட்டு யாராலே காவல் காக்க முடியும்?''

பையனுக்குத் தாயாரின் சமாதானம் உண்மை என்று தோன்றவில்லை. ''திருட்டுப் போறத்துக்கு அந்த இடத்தில் சாமானே கிடையாதே! நான் வேணுமானால் அங்கேயே இருந்து அவர்கள் எதையும் தொடாமல் பார்த்துக் கொள்கிறேன்.''



...''வராந்தாவில் நிற்க இடமில்லை. பாதிப் பேர் நடுத் தெருவில் மழையில் நனைகிறார் களப்பா! காற்று அவர்களை அடித்துக்கொண்டு போய்விடும் போலிருக்கிறது!''...

தாயாருக்குத் தர்மசங்கடம். தகப்பனாருக்கு உள்ளுக்குள் கோபம். பையனோ விடுவதாக இல்லை.

''பள்ளுப்பறைபதினெட்டுச் சாதியும் வீட்டுக்குள்ளே விடச் சொல்றியா? இடத்தைக் கொடுத்தாமடத்தைப் பிடுங்கற பசங்க அத்தனைப்பேரும். நீ சும்மா இருக்கமாட்டே?'' என்று தம் கோபத்தை வெளியிட்டார் அவர்.

''கோயிலுக்குள்ளே எல்லோரையும் விடுகிறபோது...'' என இழுத்தான் பையன். கடவுளின் வீடான கோயிலைவிட மனிதனின் வீடான இந்த மாளிகை உயர்ந்ததா என்பது அவனுடைய எண்ணம்.

''கோயில் சர்க்கார் சொத்து; இது என்னோட பாட்டன் சம்பாதித்த சொத்து!''

பையன் கொஞ்ச நேரத்துக்கு வாயை மூடிக்கொண்டிருந்தான். தகப்பனார் வாயில் வந்தபடி சர்க்காரையும் சட்டத்தையும் திட்டத் தொடங்கினார். கோயிலுக்குள்ளே எல்லோரையும் விட்டதிலிருந்து கடவுள்களெல்லாம் புறப்பட்டுப்போய்க் கங்கையில் விழுந்து விட்டார்களாம். உழைப்பவர்களுக்குச் சாதகமாகச் சட்டம் வந்ததிலிருந்து ஏழை எளியோர்களுக்கெல்லாம் திமிர் பிடித்துவிட்டதாம்.



உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று இல்லாமல் ஊர் முழுவதும் கெட்டுப்போய்விட்டதாம். "சர்க்கார் வந்து இப்போது இவர்களுக்கு இடம் கொடுக்கட்டுமே'' என்று சவால் விட்டார், பெரியவர்.

முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு சும்மா இருப்பதைத் தவிர பையனுக்கு வேறு வழியில்லை. தகப்பனாரிடம் அகப்பட்டுக்கொண்டு அரசாங்கமே அந்தப் பாடுபடும் போது அவன் எம்மாத்திரம்? உலகத்து அரசியலைக் கரைத்துக் குடித்தவர் போலவும், பொருளாதாரத்தைப் பத்து வருஷம் ஊன்றிப் பயின்றவர் போலவும் சமூகப் பிரச்சனைகளையெல்லாம், சக்கைபோடு போட்டுக் கொண்டிருந்தார்.

உருளைக்கிழங்கு வறுவல் வந்தது. பையன் முதலில் அதைத் தொடவில்லை. மற்ற இருவரும் சாப்பிட்டார்கள். கடைசியில் தாயாரின் தொந்தரவுக்காகப் பையன் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக்கொண்டான்.



**...புயலின் வேகம் வரவர அதிகமாயிற்று. பெரியவர் தம்முடைய சொத்து சுதந்திரங் களைப்பற்றி நினைத்தார்...**

புயலின் வேகம் வரவர அதிகமாயிற்று. பெரியவர் தம்முடைய சொத்து சுதந்திரங் களைப்பற்றி நினைத்தார். நெல் வயல்கள் அவருக்கு நிறைய இருந்தன. அவைகளுக்கு அதிக மான நஷ்டம் இருக்காது. அடுத்தாற்போல் அவருடைய வாழைத்தோட்டம் ஞாபகத் திற்கு வந்தது.

''ஒரு வாழைகூட நிலைச்சு நிற்காது; ஆறு ஏக்கர் தோட்டமும் அப்படியே பாழாய்ப் போகும்!''

''நல்ல வேளை!''

தாயாரின் பேச்சு அந்த இடத்தில் அசம்பாவிதமாக இருந்ததால் பையன் தகப்பனாரைக் கவனித்தான்.

''காலணாக்காசு பாக்கி இல்லாமல் குத்தகையை முன்பணமாவாங்கியாச்சு, கொஞ்சமும்

அசந்து போயிருந்தால் இத்தனை நஷ்டத்தையும் நம் தலையிலே போட்டிருப்பான்.''

பையன் வெறுப்படைந்தான். மற்றவர்களுடைய துன்பத்தை மனிதர்கள் பகிர்ந்து கொள்ளும் விதமா இது?

அன்றைக்கு இரவு பத்து மணிக்குத்தான் புயல் ஓய்ந்தது. சாப்பிட்டுவிட்டு எல்லோரும் படுக்கை அறைக்கு வந்தார்கள். மின்சார விளக்குகள் எரியாததால் மண்ணெய் விளக்குகளைக் கொண்டு காரியங்கள் நடந்தேறின. படுக்கையில் படுத்த பையனுக்குத் தூக்கம் வரவே இல்லை. கண்களை மூடிக் கொண்டு மண்டையைக் குழப்பிக் கொண்டிருந்தான்.



...''பையன் போற போக்கைப் பார்த்தியா? எல்லாம் உன்னாலே வந்தது. நாயைக் குளிப்பாட்டி நடுவிலே வைத்தாலும் வாலைக் குழைத்துக் கொண்டு குப்பை மேட்டுக் குத்தான் ஓடும்.''...

''ராஜா'' என்று அவன் தாயார் செல்லமாய்க் கூப்பிட்டாள்.

பையன் பதில் பேசவில்லை.

''தூங்கிவிட்டான்போல இருக்கு. அவனைப்போய்த் தொந்தரவு பண்ணாதே. இப்படி வா'' என்றார் பெரியவர்.

பிறகு இருவரும் இருளில் தங்கள் பையனைப்பற்றி பேசத் தொடங்கினார்கள். பையன் விழித்திருப்பது தெரியாததால், தாரளமாக அவர்களுடைய எண்ணங்கள் வெளிப்பட்டன.

''பையன் போற போக்கைப் பார்த்தியா? எல்லாம் உன்னாலே வந்தது. நாயைக் குளிப்பாட்டி நடுவிலே வைத்தாலும் வாலைக் குழைத்துக் கொண்டு குப்பை மேட்டுக்குத்தான் ஓடும்.''

சுரீர் என்று ஒரு கத்தி மார்புக்குள் நுழைந்து முதுகுப்புறமாய் வெளிவந்த மாதிரி இருந்தது பையனுக்கு.

''இந்த வயசில் இப்படித்தான் கிறுக்குத்தனமாய்ப் பேசுவான். நாலு வருஷம் போனா உங்களைவிடச் சமர்த்தா இருக்கப் போறான் பாருங்க! காலுக்கு ஒரு கட்டுப்போட்டு அவனுக்கின்னு ஒரு குழந்தை பிறந்தா எல்லாம் சரியாப் போகும்.''

''நமக்குன்னு ஒரு குழந்தை பிறந்தா இப்படியெல்லாம் பேசுமா?''

''நடக்காததை ஏன் இப்போ பேசுறீங்க? நம்ம ராஜா நல்ல புத்திசாலியா வருவான் பாருங்க. எல்லாம் வளர்க்கிற முறையிலே இருக்கு!''

''ராத்திரி சாப்பிடறப்போ அவன் என்ன சொன்னான் கேட்டியா? இலையிலே சாப்பாட்டை வைத்துக்கொண்டு இப்படி பேசினா எப்படி அந்தச் சோறு உடலில் ஒட்டும்?''

ராத்திரி இலைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு அவன் செய்த குற்றத்தை ராஜு இப்போது எண்ணிப் பார்த்தான். இதே குற்றத்தை மத்தியானமே செய்யும்படி அவனுக்குத் தூண்டுதல் இருந்தது. ஆனால் தனக்குள்ளாகவே வெகுநேரம் போரிட்டுவிட்டு இரவில் சாப்பிடப்போகும் போது அதை ஆரம்பித்தான். சாப்பாட்டு விஷயத்தைச் சாப்பாட்டு வேளையில் ஆரம்பிக்காமல் வேறு எப்போது ஆரம்பிப்பது?

காலையில் பத்து மணிக்குமேல் வீட்டிற்கு முன் கூடியவர்கள் பொழுது போகும் வரையில் அங்கே நெருக்கிக்கொண்டு கிடந்தார்கள். அதற்குப் பிறகும் இரவு பத்து மணிக்குப் புயல் ஓய்ந்த பின்பும்கூட அவர்கள் எங்கும் போகவில்லை. எங்கே பேர்வார்கள்? எங்கே போய் என்ன செய்ய முடியும்?

சாயங்காலமாக வீட்டுக்கு வெளியே ஒரே அழுகை மயமாக இருந்தது. சகிக்க முடியாத அழுகை, சின்னஞ்சிறு குழந்தைகள் பாலுக்கு அழுதன, வயதுவந்த பிள்ளைகள் சோற்றுக்கு அழுதன, பெண்கள் காலையில் கடலுக்குள் போன ஆண்களை நினைத்துக்கொண்டு அழுதார்கள். எல்லோருடைய எல்லாவிதமான அழுகைகளுக்கும் அடியில், அடிவயிற்றில்,

பசிப்புயல் பதுங்கிச் சீறியதால் அவர்களுடைய அழுகையின் வேகம் ஐம்பது மடங்காகப் பெருகியது.

ராஜுவும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு ஹாலுக்குள் நின்று மௌனமாக அழுதான். தான் இப்படி அழுவது அவனுக்குக் கோழைத்தன மாகத்தெரிந்தது. 'திடீரென்று வாசற்கதவுகளைத் திறந்துவிட்டு அவர்களை உள்ளே அழைத்தால் என்ன? அரிசி மூட்டை இருக்குமிடத்தைக் காண்பித்து அதை அடுப்பில் கொதிக்க வைத்துக் குடிக்கச் சொன்னால் என்ன? ஒருநாள் - ஒருவேளைச் சோறு போட்டால், தங்க இடம் கொடுத்தால், இந்தப் பெரிய குடி முழுகியா போய்விடும்?'

ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. சாப்பாட்டிற்குத் தகப்பனாரோடு இலைக்கு முன் உட்கார்ந்தபோது இலையிலிருந்த நாலுவகைக் கறியும் குழம்பும் அவன் கண்களை உறுத்தின. ஒவ்வொரு அரிசிச் சோறும் ஒரு ஏழைக் குழந்தையாக மாறி, 'ஐயா, பசிக்குதே!' என்று அவன் முன்பு அலறியது. அவன் அதைத் தொடவில்லை.

''ஐந்து படி அரிசியைக் கஞ்சியாய்க் காய்ச்சி ஊற்றினால் நூறு பேருக்குப்பசி அடங்குமே! என்று ஆரம்பித்தான்.

''என்ன சொல்றே?'' என்றார் தகப்பனார்.

சற்று முன்பு சொன்னதையே அவன் திருப்பிச் சொன்னான்; ''ஐந்துபடி அரிசிதான் செலவு; நூறு பேருடைய வயிறு குளிரும்.''

''அரிசிக்கு எங்கே போறது?''

அவனுக்கு இந்தக் கேள்வியின் பொருள் விளங்கவில்லை. அரிசிக்கு எங்கும் போக வேண்டாமே! மூட்டை மூட்டையாய் அங்கே அரிசி இருந்தது; களஞ்சியம் களஞ்சியமாய் அங்கே நெல் இருந்தது; எலியும் பெருச்சாளியுமே ஒரு நாளைக்கு ஒன்பதுபடி அரிசியைத் தின்பதாகச் சமையற்காரன் புகார் செய்து கொண்டிருந்தான்.



**...''அரிசிக்கு எங்கே போறது?'' அவனுக்கு இந்தக் கேள்வியின் பொருள் விளங்கவில்லை. அரிசிக்கு எங்கும் போக வேண்டாமே! அங்கே மூட்டை மூட்டையாய் அரிசி இருந்தது...**

தகப்பனும் பிள்ளையும் அதற்கப்புறம் பேசிக்கொள்ளவில்லை. இலையில் போட்ட சோற்றை அப்படியே வைத்துவிட்டுக் கையலம்பிக் கொண்டான் பையன். தாயார் அவனிடம் வந்து விடாப்பிடியாய்ச் சாப்பிடச் சொல்லிக் கெஞ்சினாள். எவ்வளவோ சமாதானம் செய்தாள். ஆனால் ஐந்து படி அரிசியை அதற்காக அவள் இழப்பதற்கு மாத்திரம் தயாரில்லை.

ராஜு அவர்களுடைய சொந்தப் பிள்ளைதான். சொந்தம் என்பதற்கு என்ன அர்த்தம்? வீடு வாசல், காணி கரை, ஆடு மாடு எல்லாம் எப்படி ஒருவருக்குச் சொந்தமாகின்றன? அந்த மாதிரிச் சொந்தம் இது. பத்தாயிரம் ரூபாய்ப் பணம் கொடுத்து விலைக்கு வாங்கிய அவர்களுடைய சொந்தப் பிள்ளை அவன். ஐந்தாறு குழந்தைகளைப் பெற்றுவிட்டுப் பிறகு வளர்க்கமுடியாமல் திண்டாடிய பெற்றோரிடமிருந்து அவனை ஸ்வீகாரம் செய்து கொண்டார்கள்.

படுக்கையில் புரண்டு கொண்டிருந்த ராஜுவுக்குத் தூக்கம் வரவில்லை. பெற்ற இடத்தின் பிடுங்கல்களும் வளர்க்கும் இடத்தின் வளப்பமும் மாறி மாறி நினைவில் வந்தன. சோற்றுக்கும் துணிக்கும் அவன் அங்கே பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. அதற்கு முற்றிலும் மாறாக இங்கே எல்லாம் ராஜ போகமாக இருந்தது. திருச்சினாப்பள்ளியில் ஹாஸ்டலில் தங்கி அவன் படித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு வேண்டியதையும், வேண்டாததையும் ஸ்வீகாரப் பெற்றோர்கள் வாங்கிவாங்கிக் கொடுத்தார்கள். ஒன்றே ஒன்றைத் தவிர அவனுக்கு எல்லாம் கிடைத்தன; – உண்மையான அன்பு; ரத்தத்திலே ஊறிய அன்பு.

'நமக்குன்னு ஒரு குழந்தை பிறந்தா இப்படியெல்லாம் பேசுமா?' என்று அவன் தகப்பனார் தன் மனைவியைக் கேட்டபோது, 'நம்முடைய தகப்பனாராக இருந்தால் இப்படிக்

கல்லாலடித்த சிலைபோல் மனம் இரங்காமல் இருப்பாரா?' என்று எண்ணினான். நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்ததாக அவர்சொன்ன உபமானத்தையும் அவன் மறக்கவில்லை. எங்கேயாவது ஆயிரத்தில் ஒரு நாய்க்குட்டிக்கு அதிர்ஷ்டம் கிடைக்கிறது. பாலும், பழமும், பட்டுமெத்தையும், கார் சவாரியும் அதற்கு அளித்துப் பணமுள்ளவர்கள் மகிழ்கிறார்கள். அதனால் எல்லா நாய்களிடமும் அவர்களுக்குப் பிரியம் என்று அர்த்தமா? தினந்தோறும் தோட்டிகளால் அடித்துக் கொல்லப்படும் குப்பைமேட்டு நாய்களின் கூட்டத்தை அவர்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

பாதிராத்திரிக்கு மேல் புயல் நன்றாக ஓய்ந்துவிட்டது. வானத்தில் மேகங்களைக் காணோம். ராஜு தான் திருச்சியிலிருந்து லீவில் திரும்பும்போது கொண்டு வந்த பதினைந்து ரூபாயை நினைத்துக் கொண்டான். அவனுக்கு எதிர்பாராமல் கிடைத்த பணம் அது. பத்திரிகைக்குப் பல கதைகள் எழுதி அனுப்பிக்கொண்டிருந்தான். பெரும்பாலும் எல்லாக் கதைகளும் திரும்பி விட்டன. சமீபத்தில் தான் ஒரு கதையைமட்டும் பிரசுரித்து அதற்காக இந்தப் பணத்தை அன்பளிப்பாக அனுப்பியிருந்தார் ஆசிரியர். இந்தச் சமயத்தில் கிடைத்த பதினைந்து ரூபாய் அவனுக்குப் பதினைந்தாயிரம் போல்தோன்றியது.



...அநேகம் பேர் தங்களுடைய எல்லாவற்றையும் இழந்து விட்டு நிர்க்கதியாய் நிற்கும் போது தான் மட்டிலும் இந்தப் பதினைந்து ரூபாய்க்குச் சொந்தக்காரனாக இருக்க விரும்பவில்லை...

பொழுது விடிந்தவுடன் ராஜு ஊருக்குள்ளே கிளம்பினான். நல்ல மனிதர்கள் நாலு பேராவது இன்னும் ஒவ்வொரு ஊரிலும் இருக்கிறார்கள் என்ற உண்மை அவனுக்கு அப்போது தான் தெரிந்தது. ஈவு இரக்கம் உள்ளவர்கள் ஒன்றாய்க்கூடிக் கஞ்சி காய்ச்சி ஏழை எளியவர்களுக்கு ஊற்றிக் கொண்டிருந்தார்கள். உடலில் வலுவிருந்தவர்கள் மரப்பட்டைகளை வீடுகளின் முன்பிருந்து அகற்றிக் கொண்டிருந்தனர். அங்கே இருந்த அரசாங்க அதிகாரியும் மற்றவர்கள் துணைகொண்டு தம்மாலான உதவிகளைச் செய்தார்.

கரையோரமாக ஒதுங்கியிருந்த ஒரு கட்டை மரத்தைச் சுற்றிலும் சிறிய கூட்டம் இருந்தது. ராஜு கூட்டத்தோடு கூட்டமாய்ப் போய் நின்றான். அங்கே கண்ட காட்சி இருதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. மூன்று பெண்பிள்ளைகள் கட்டை மரத்தின் ஒரு மூலையைக் கட்டிக்கொண்டு ஓவென்று கதறி அழுதார்கள். வாயிலும், வயிற்றிலும் மாறி மாறி அடித்துக் கொண்டு புலம்பினார்கள். ராஜு நடந்ததைப் புரிந்து கொண்டான். நேற்றுக்காலையில் கட்டை மரத்திலேறிக் கடலுக்குள் போனவர்கள் திரும்பவில்லை. ஆனால், கட்டை மரம் மாத்திரம் திரும்பிவிட்டது. மூன்று பேர் போனார்களாம். அந்த மூன்று பேர்களுடைய உடல்களும் இப்போது எங்கே ஒதுக்கப்பட்டுக்கிடக்கின்றனவோ? எந்த நிலையில் கிடக்கின்றனவோ?

ஊர்ப்புறத்தில் புயல் விளைவித்திருந்த நாசத்தைப் பார்க்கப் பார்க்க ராஜுவுக்குத் தன் பையிலிருந்த பணம் பெரும் சுமையாகத் தெரிந்தது. அதைக் கொண்டு எப்படி உதவலாம் என்று எண்ணற்ற யோசனைகள் செய்தான். இந்தப் பணத்தால் எள்ளத்தனை உபகாரம்கூடச் செய்ய முடியாதே என்பதும் அவனுக்குத் தெரியாமல் இல்லை. ஆனாலும் அநேகம் பேர் தங்களுடைய எல்லாவற்றையும் இழந்துவிட்டு நிர்க்கதியாய் நிற்கும்போது தான் மட்டிலும் இந்தப் பதினைந்து ரூபாய்க்குச் சொந்தக்காரனாக இருக்க விரும்பவில்லை.

ஊரை நன்றாகச் சுற்றிப் பார்ப்பதற்குள் மத்தியமானமாகிவிட்டது. கடைத்தெருப்பக்கம் வந்தான்; ஒரு துணிக்கடையில் நுழைந்து மூன்று கெட்டியான போர்வைகளைப் பதினைந்து ரூபாய்க்கு வாங்கிக் கொண்டான். வானத்துக்குக் கீழே கூரையில்லாமல் உறங்குபவர்களுக்குப் போர்வைதான் சரியான கூரை; இடுப்பில்

துணியில்லாதவர்களுக்குச் சுலபமாய்க் கிழியாத துணி; படுக்கப் பாயற்றவர்களுக்குச் சுருட்டி மடக்கக்கூடிய பாய்...

திரும்பவும், கட்டை மரத்துப்பக்கம் ராஜு வரும்போது அங்கே கூட்டம் எதுவும் இல்லை. கந்தல் கட்டிய குழந்தைகள் இரண்டு பரட்டைத் தலையோடு மணலில் சோர்ந்து படுத்திருந்தன. மூன்று பெண்களும் அப்படியே அந்தக் கட்டை மரத்தைத்தழுவிக்கொண்டுகட்டையைப்போல் நினைவிழந்து கிடந்தார்கள். கண்ணீர் மாத்திரம் பெருகிக் கொண்டே இருந்தது.

ராஜு அவர்களுக்கு அருகில் போனவுடன் அவர்கள் புரியாமல் விழித்தார்கள். போர்வையை ராஜு ஒவ்வொன்றாக எடுத்து ஒவ்வொருவருக்கும் கொடுத்தான். இயந்திரம் போல் அவர்களது கரங்கள் நீண்டு அவற்றைப் பெற்றுக்கொண்டன.

ஒரே ஒருத்தி துயரம் தாங்காது ராஜுவைப் பார்த்துக் கத்தினாள்; ''எங்களுக்குக் கோடித்துணியா ஐயா போடுறீங்க? நாங்க என்னய்யா செய்வோம்? எங்க பிள்ளை குட்டி எப்படி ஐயா பொளைக்கும்?''

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ராஜு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். அவனைச் சுற்றியிருப்பவர்களின் துன்பம் அவனைத் தொடர்ந்துகொண்டே வந்து பரிகசித்தது. ஊருக்கே பொதுவாகப் புயல், சேதம் விளைவித்தது உண்மைதான்; ஆனால் அடித்துக் கொண்டு போன நூற்றுக் கணக்கான குடிசைகள் யாருடையவை? கடலுக்குள்ளேயும் சுவர்களின் அடியிலும் செத்து விழுந்த உடல்கள் யாருடையவை? இப்போது தங்களுடைய எல்லாவற்றையுமே இழந்து தவிப்பவர்கள்யார்?

மூன்று நான்கு நாட்கள் கழிந்தன. விடுமுறை தீர்ந்து விட்டதால் ராஜு திரும்பவும் திருச்சிக்குப் புறப்பட்டான். அவனுடைய சாமான்களை எடுத்துப் பெட்டிக்குள் வைப்பதில் அவனுக்கு உதவி செய்ய வந்தாள் அவன் தாயார். உடைகள், புத்தகங்கள் யாவும் எடுத்து அடுக்கி ஆயிற்று. படுக்கையைச் சுற்றிக் கட்டும்போது ஏதோ நினைவு வந்தவள்போல் பரக்கப் பரக்க உள்ளேபோய் ஒரு புதுப் போர்வையை எடுத்துக் கொண்டு அவனிடம் வந்தாள்.



... ஈரம் நிறைந்த இளம் நெஞ்சில் அப்போதுதான் பயங்கரமான கோரப் புயல் ஆரம்பமாகியது. அந்தப் புயலுக்கு முன்னே சில தினங்களுக்கு முன்பு வீசிய புயல் அற்பச் சூறாவளியைப் போன்றது!...

பையன் அதை உற்றுப் பார்த்தான். நெற்றியில் கேள்விக் குறி எழுந்தது.

''எப்போ வாங்கின போர்வை அம்மா இது?''

''முந்தாநாள் வாங்கினேன். கொள்ளை மலிவு, சொன்னால் நீ நம்ப மாட்டே; மூணு போர்வை அஞ்சு ரூபாய்!''

பையனக்குப் பகீரென்றது.

''கடல்கரைப் பக்கம் போறப்போ மடிப்புக் கலையாமல் புத்தம் புதுசா வச்சிருந்தாளுக. 'உங்களுக்கு எதுக்கடி இதெல்லாம்? பணம் குடுக்கிறேன் தாரீங்களா?'ன்னு கேட்டேன் பத்து ரூபாய் கேட்டா. அரை மணிநேரம் பேரம் பண்ணி அஞ்சு ரூபாய்க்கு வாங்கினேன். பதினைந்து ரூபாய்க்குக்கூட இந்த மூணு போர்வையும் கடையிலே தரமாட்டான்.''

ஈரம் நிறைந்த இளம் நெஞ்சில் அப்போதுதான் பயங்கரமான கோரப் புயல் ஆரம்பமாகியது. அந்தப் புயலுக்கு முன்னே சில தினங்களுக்கு முன்பு வீசிய புயல் அற்பச் சூறாவளியைப் போன்றது!

**(அகிலனின் 'வழி பிறந்தது' சிறுகதைகள் தொகுப்பிலிருந்து. நன்றி: தாகம், 58, துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, விவேகானந்தர் இல்லம், சென்னை - 5)**

**செல்வந்தர்களின் நோய்கூட எல்லார்க்கும் தெரிந்திருக்கிறது, ஆனால் ஏழையின் மரணம் யாருக்கும் தெரியவில்லை.**

**- ஃபின்னிஷ் பழமொழி**

# ஆசிரியர் மடல்

## திட்டங்களைத் தெரியப்படுத்துங்களேன்!

மாவட்டங்களிலிருந்து 'தமிழரசு' இதழில் வெளியிட
வேண்டிய விருப்பத்துடன்
பல தகவல்கள் வருகின்றன.

ஏற்கெனவே நடந்த விழாக்களின் விவரங்களாகவும்,
அதில் பேசியவர்கள் பட்டியல்களாகவும்
அவை இருக்கின்றன.

மாவட்டங்களிலிருந்து நாங்கள் எதிர் நோக்குபவை அரசின்
திட்டங்கள் குறித்த செயல்பாடுகளும்,
அந்த முயற்சிகளின் முனைப்பால் நிகழ்ந்த
முத்துக் குளிப்புகளும் தான்.

திட்டங்களின் விவரங்களை மட்டும் வெளியிடும் பொழுது,
நம்பிக்கை விதைகளை,
வாசிப்பவர் இதய வயல்களில் ஊன்ற முடிவதில்லை.

அவற்றை உபயோகித்து உயர்ந்து நிற்பவர்களைப் பற்றிப்
படித்தால், படிப்படியாக நாமும் முன்னேற முடியும்
என்கிற எண்ணம் ஏற்படும்.

தித்திப்பாக இருப்பதுதான் திகட்டியும் விடுகிறது.
திட்டங்களின் வளமான பக்கங்களை மட்டுமே வாசிக்க
நிர்ப்பந்திப்பதில் நியாய மில்லை;
அவற்றில் உள்ள நடைமுறைச் சிக்கல்களையும்,
அணுகுமுறையில் உள்ள தவறுகளையும் பற்றி
எழுதுங்கள்.

எப்படிச் செய்தால் இன்னும் மேம்படும் என எழுதுங்கள்.
பயனாளிகள் மட்டும் முழுமையான விழிப்புணர்வு
அடைந்துவிட்டால் போதும்:
அரசு எண்ணுகிற முன்னேற்றம் நிறைவேறி விடும்.
'தமிழரசு' அதற்கு ஒரு கருவியாய்த் திகழ்வதே
எங்கள் நோக்கம்.



ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
(முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002, தொலைபேசி எண் : 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

